
www.tamilarangam.net

# புதிய இளைஞன்



'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE

ஜனவரி 1990.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய இளைஞன்

இனி ஒரு
விதிசெய்வோம்!

□

இதழ் : 2
ஜனவரி, 1990

□

விலை ரூ. 2

□

தனிச்சுற்றுக்கு மட்டும்

□

ஆசிரியர் :
சி. மகேந்திரன்

ஆசிரியர் குழு :
தேவ. பேரின்பன்
மு. வீரபாண்டியன்

முகப்பு ஓவியம்: சந்துரு

அச்சு : இராசகிளி பிரிண்டர்ஸ்
சென்னை-20.

## புதிய அரசும் புதிய நம்பிக்கைகளும்

புதிதாகப்பதவி ஏற்றுள்ள தேசிய முன்னணி அரசு எப்போது வேண்டுமானாலும் கவிழலாம் என்ற எதிர் பார்ப்பு பரவலாக நிலவுகிறது. ஆனால், இப்போதைக்கு தேசிய முன்னணி அரசுக்கு எந்தவித ஆபத்துமில்லை என்பதுதான் உண்மையான நிலவரம்.

1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜனதா அரசுக்கு ஏற்பட்ட கதிதான் தேசீய முன்னணி அரசுக்கும் ஏற்படும் என்பது இ. காங்கிரஸ் கட்சியின் அனுமானம். அப்படியே, தற்போதைய நெருக்கடிகளை தேசிய முன்னணி அரசு சமாளித்து, ஓராண்டோ அல்லது இரண்டாண்டுகளோ பதவியில் நீடித்தால், அந்தச் சமயத்தில், தேசீய முன்னணித் தலைவர்களிடையே குழப்பம் விளைவித்து, அரசைக் கவிழ்த்து விடலாம்; அதுவரை, அமைதியாக இருப்பது, மக்களிடையே குறிப்பாக கட்சி சாராத நடுநிலையாளர்களின் மனதில் தங்களைப்பற்றி ஜனநாயகம் என்ற பண்புள்ளவர்கள் நம்பிக்கையை வளர்க்கும்; அது அடுத்துவரும் தேர்தலில் கைகொடுக்கும், என்பது காங்கிரஸ் தலைவர்களின் திட்டம்.

தேசீய முன்னணிக்கு அடுத்தபடியாக, அதிக இடங்களை வென்றுள்ள பாரதீய ஜனதா கட்சி, விரைவில் 10 மாநிலங்களில் நடக்கவிருக்கும் சட்ட மன்றத் தேர்தல்களை கருத்தில்கொண்டு காய்களை நகர்த்தி வருகிறது. இதனால், சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, ராமஜன்மபூமி, இட ஒதுக்கீட்டுக் கொள்கை போன்ற விவகாரங்களில் அது ஒரு பலப்பரீட்சையை உருவாக்கி, தேசீய முன்னணி அரசுக்கு அபாயத்தை ஏற்படுத்தாது என்று உறுதியாக நம்பலாம். ஆனால் 'பசுத்தோல் போர்த்திய புலி'யாக இது செயல்படும்— என்ற எச்சரிக்கை உணர்வுடன் தேசீய முன்னணி அரசு செயல்படுவது நல்லது.

மக்கள் பிரச்சினைகளில் வி. பி. சிங் அரசு துரிதமாகச் செயல்படும்படி எல்லாவகையிலும் நிர்ப்பந்திப்பது இடது சாரிக்கட்சிகளின், குறிப்பாக, கம்யூனிஸ்ட் கட்சிகளின் பொறுப்பாகும்.

அரசியல் தெளிவும், தீர்க்கதரிசனமும், அடித்தட்டு மக்களின் பால் அசைக்கமுடியாத நம்பிக்கையும் கொண்ட இடது சாரிக்கட்சிகள் இந்தச் சந்தர்ப்பத்தில் விழிப்போடு செயல்பட வேண்டும். இதில் இளைஞர்களின் பங்கு தீரமிக்கதாக இருக்க வேண்டும்.

□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ராமஜென்ம பூமியில் மதவாதிகளுக்கு கிடைத்த மரண அடி!

பைசாபாத்: இந்தியாவிலேயே மிக அதிகமான (85) நாடாளுமன்றத் தொகுதிகளைக் கொண்ட உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள தொகுதி இது. இந்தத் தொகுதி மக்கள் அளித்துள்ள தீர்ப்பு இந்தியாவின் கவனத்தை ஒட்டுமொத்தமாக ஈர்த்துள்ளது. ஆம்! இந்தத் தேர்தலில், வகுப்புவாத வெறியர்களால் முக்கியப் பிரச்சினையாகச் சித்தரிக்கப்பட்ட 'ராமஜன்ம பூமி'யின் அயோத்தியை உள்ளடக்கிய பைசாபாத் தொகுதியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வெற்றி கண்டுள்ளார். ஆர். எஸ். எஸ்., விஸ்வ ஹிந்து பரிஷத், சிவசேனை போன்ற வகுப்புவாத அமைப்புகளின் அரசியல் மேடையாகத்திகழும், பாரதீய ஜனதாக் கட்சிக்கும், தேர்தல் சமயத்தில் மதவெறிக்கு தூபமிட்ட காங்கிரஸ் கட்சிக்கும் இதைவிடக் கடுமையான சாட்டையடி வேறு என்னவாக இருக்கமுடியும்?

பைசாபாத்தில், ஜனதாதளக் கூட்டணி ஆதரவுடன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட மித்ராசென் யாதவ், 1, 91, 031 வாக்குகள் பெற்று வெற்றிவாகை சூடியுள்ளார். இந்தத்தொகுதி மக்கள் பாரதீய ஜனதா கட்சியின் முகமூடியைக் கிழித்து நாட்டுக்கு அடையாளங் காட்டியுள்ளார்கள்.

## *முதல் தோல்வி*

பைசாபாத் தொகுதியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு விட்டுக் கொடுக்கக் கூடாது என்று, பாரதீய ஜனதா கட்சி, ஆரம்பம் முதலே ஜனதா தளத்தை வலியுறுத்தி வந்தது. இந்த முயற்சியில் தோல்வி கண்ட பா.ஜ.க., அயோத்தியை ஒரு கம்யூனிஸ்ட் பிரதிநிதித்துவப் படுத்துவதா என்ற வெறியுடன், தானே ஒரு வேட்பாளரை நிறுத்தியது. காங்கிரஸ் கட்சி சார்பில் நிர்மல் காட்ரி என்ற வேட்பாளர் நிறுத்தப்பட்டார். தேர்தல் நெருங்க, நெருங்க தொகுதியில் ஏற்பட்ட மாற்றங்கள் பா. ஜ. க.வுக்குஅச்சத்தைக் கொடுத்தது. தனக்கு தோல்வி உறுதி என்று தெரிந்ததும் திடீரென்று பா. ஜ. க. போட்டியிலிருந்து விலகியது. பைசாபாத்தில், பா. ஜ. க. வேட்பாளர் தோற்றால், அது பெரிய அவமானம் என்று அக்கட்சியின் தலைவர்கள் கருதினர். தங்கள் வேட்பாளரை வாபஸ் பெற்றதோடு நிற்காமல், காங்கிரஸ் வேட்பாளரை ஆதரிக்குமமாறு பா. ஜ. க. வேண்டுகோள் விடுத்தது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் மித்ராசென் யாதவின் வெற்றி வாய்ப்பை முறியடிக்க பா. ஜ. க. என்னவெல்லாமோ செய்தது. இறுதியில், மதவெறியர்களின் மண்டையில் சம்மட்டியால் அடித்தாற்போல, மக்கள் திட்டவட்டமாகத் தீர்ப்பளித்து விட்டார்கள்.

இப்போது மக்களின் தீர்ப்பையே அவமதிக்கும் வகையில், சிறுபான்மையினரான முஸ்லீம்களின் ஆதரவுடன்தான் கம்யூனிஸ்ட் வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார் என்று பா. ஜ. க. வெட்கமில்லாமல் பொய்பேசுகிறது. நாடுமுழுவதும் ராமர் சிலை ஊர்வலங்களையும், பூஜைகளையும் நடத்தி வகுப்பு வெறியைத் தூண்டிவிட்டு, பல அப்பாவி மக்களின் உயிரைப்பறித்த பா. ஜ. க. வுக்கு அயோத்தியில் கிடைத்த மரண அடியின் எதிரொலியே இந்தப் புலம்பல். பைசாபாத் நாடாளுமன்றத் தொகுதியில் மொத்தம் 1, 25, 000 முஸ்லிம்கள் உள்ளனர் என்பது உண்மையே. இவர்களின் வாக்குகள் வெற்றியை நிர்ணயிப்பதாகக்கூட இருந்திருக்கலாம். ஆனால், அவர்கள் எல்லோருமே கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளருக்குத்தான் வாக்களித்திருக்க முடியும் என்று கூறுவது எந்த வகையில் நியாயம்? மேலும், நாடுமுழுவதையும் பரபரப்புள்ளாக்கிய 'ராமஜன்ம பூமி' பிரச்சினையின் பிறப்பிடமான அயோத்தியிலேயே, வகுப்புவாதிகளை மக்கள், குறிப்பாக ஹிந்துக்கள் நிராகரித்துள்ளார்கள் என்பதைத்தானே இந்தத் தேர்தல் முடிவு காட்டுகிறது. "நல்லமாடு என்றால் உள்ளூரில் விலை போகும்" என்றொரு பழமொழி உண்டு. அதைப்போல, பா. ஜ. க. வின் நிலை சரியானதுதான் என்று மக்கள் கருதியிருந்தால், அது தேர்தல் முடிவிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிரொலித்திருக்குமல்லவா? தேர்தல்களத்தில் கடைசிவரை நிற்கக்கூடத் தைரியமில்லாமல், பாதியில் வேட்பாளரை வாபஸ் பெற்ற பா. ஜ. க.,வுக்கு, கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரின் வெற்றி குறித்து பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது?

### எதிரியின் நண்பர்கள்

''நமது முதல் நண்பர்கள் பா. ஜ. க., இரண்டாவது நண்பர்கள் காங்கிரஸ் கட்சி'' என்று கேரளத்தில் தனது தொண்டர்களுக்கு, விஸ்வஹிந்து பரிஷத் ரகசியமாகச் சுற்றறிக்கை விட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இது போதாதா? யார், யாருடைய கூட்டாளிகள் என்று இனங்கண்டு கொள்ள...! ஆர். எஸ். எஸ்., விஸ்வஹிந்து பரிஷத் போன்ற வகுப்பு வாத வெறியர்களுடன், தங்களுக்கு தொடர்பு கிடையாது என்று, இன்னமும் மனசாட்சியை அடகுவைத்து பா. ஜ. க. பொய்களைப் பரப்பி வருகிறது. ஆனால், இவற்றையெல்லாம் மக்கள் ஏற்கத் தயாரில்லை என்பதற்கான அடையாளச் சின்னம்தான், அயோத்தியை உள்ளடக்கிய பைசாபாத் தொகுதியின் தேர்தல் தீர்ப்பு.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் மூன்று தொகுதிகளில் போட்டியிட்ட இந்தியக் கம்யூனிஸட் கட்சி, பைசாபாத், பாண்டா ஆகிய இரு தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. பைசாபாத் வெற்றி, வகுப்புவாதத்துக்கு எதிராக இடதுசாரிக் கட்சிகள் நடத்திய கருத்து, களப்போராட்டத்துக்கு மக்கள் அளித்துள்ள ஆதரவைக் காட்டுகிறது.

நவம்பர் மாதம் 9ஆம் தேதி, இடதுசாரிக் கட்சிகள் மற்றும் முற்போக்கு அமைப்புகள் இணைந்து நடத்திய வகுப்பு அமைதி ஊர்வலத்துக்கு மித்ராசென் யாதவ்தான் தலைமை தாங்கி நடத்திச் சென்றார். இதற்கு முன்னரும், மக்கள் பிரச்சினைகளுக்காக பல போராட்டங்களில் கலந்து கொண்டவர் மித்ராசென். ஆக, பைசாபாத் வெற்றி, இடதுசாரிக் கட்சிகளுக்கு மக்கள் அளித்த கௌரவம் என்றால் அது மிகையாகாது. கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றியை ஜீரணிக்க முடியாத மதவாத வெறியர்கள், தேர்தலுக்குப் பிறகு ஒரு வாரம் கழித்து மித்ராசென்யாதவை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்ய முயற்சித்தனர். எனினும், இந்தக் கொலை வெறியிலிருந்து குண்டுக் காயங்களுடன் மித்ராசென் உயிர்பிழைத்தார்.

தேர்தலில் மட்டுமல்ல, அதற்குப் பிறகும், தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாமல் வகுப்புவாத சக்திகள் வன்முறையைத் தொடர்ந்ததற்கு இதுவும் ஓர் அடையாளமாகும்.

### பெருகிய பலம்

இது ஒருபுறமிருக்க, தேசீய அளவிலும் இடதுசாரிக் கட்சிகளின் அந்தஸ்து உயர்ந்துள்ளது. கடந்த எட்டாவது நாடாளுமன்றத்தில் இடதுசாரிக் கட்சிகளின் 32 பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர். ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் இடதுசாரிக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் 51 ஆக உயர்ந்துள்ளது. கடந்தமுறை 6 இடங்களில் வெற்றி பெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்த முறை 12 இடங்களில் வெற்றி கண்டு, நாடாளுமன்றத்தில் தனது பிரதிநிதித்துவத்தை இரட்டிப்பாக்கியுள்ளது. மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 22 இடங்களிலிருந்து 32 இடங்களாக தனது அந்தஸ்தை உயர்த்தியுள்ளது. ஆர். எஸ். பி. யின் எண்ணிக்கை மூன்றிலிருந்து நான்காக உயர்ந்துள்ளது. பார்வர்ட்பிளாக் கடந்த முறையைப் போல, இந்தத்தடவையும் அதே 3 இடங்களைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. இதற்கெல்லாம் மேலாக, மத்தியில் பொறுப்பேற்றுள்ள புதிய அரசு, இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இது, மக்கள் பிரச்சினைகளில் இடதுசாரிகளின் நிர்பந்தத்தை முற்றிலும் நிராகரிக்க முடியாத சூழலை மத்திய அரசுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இவை அனைத்தும், இத்தனை ஆண்டு காலம் இடதுசாரிக் கட்சிகள், சமூக மாற்றத்திற்காக தளராமல் ஆற்றிவந்த பங்களிப்பின் வெளிப்பாடே என்பது நிதர்சனம்.

—சித்ரா

With Best Compliments from

**VISION OF INDIA**

Producers of Tele-Film documentations
Educational Shorts, Advertisements
and News Features

Plot No. 7, Murugesa Naicker Colony,
Rengarajapuram Main Road, Madras-24.

Heae Office : 203, Nirmal Nikesan Srinagar
Colony, Hydrabad-500 873

Phone : 226580

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''ஒவ்வொரு மனிதனும், ஏதாவது ஒரு சூழ்நிலையில் ஒரு முட்டாள்தனத்தை செய்து விடுகிறான்; இது உண்மை. யாரோ நாலு பெரிய மனிதர்கள் என்னை அவமானப்படுத்திய கோபத்தில் அரசியல்கட்சி என்ற அவசர முடிவெடுத்தேன். ...இப்போது வர, வர நான் கட்சி நடத்துவதுபோய், என்னைக் கட்சி நடத்த ஆரம்பித்துவிட்டது. ......மீண்டும் ஒரு முறை அனைவரையும் மன்னிக்கவேண்டி பணிவன்புடன் பொது ஆளு; புது ஆளு''

'சின்னவீடு' சினிமா புகழ் (!) பாக்கியராஜ், டிசம்பர் மாதம் 12 ஆம் தேதியிட்ட 'தினத்தந்தி' இதழில் வெளியிட்டுள்ள அறிக்கை இது. வேறொன்றுமில்லை l போணியாகாத தனது அரசியல் கடையை மூடியதற்கான காரணங்களை மனந்திறந்து பொது மக்களுக்கு விளக்கியுள்ளார் பாக்கியராஜ்.

'முருங்கைக்காய்' பாணி வியாபாரத்தில் கைதேர்ந்த இவர், கடந்த ஜனவரியில் நடந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு 'எம். ஜி. ஆர். மக்கள் முன்னேற்றக் கழகம்' என்ற பெயரில் புதிய அரசியல் கடை விரித்தார். ஏகப்பட்ட நஷ்டம்! இருந்தாலும், அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு, 'மக்கள் நலனுக்காக' கிட்டத்தட்ட ஒரு வருஷம் கடையை நடத்தினார். ஒரு வழியாக, மக்கள், எல்லா வளமும் பெற்றதாகத் தெரிந்தவுடன், கடையை மூடிவிட்டு பழைய வியாபாரத்திற்கு திரும்பி விட்டார்.

மக்களை 'இழிச்சவாயர்களாக' கருதும் ஒரு தனிநபரின் மிக அலட்சியமான வெளிப்பாடுதானே இது! நினைத்தால் கட்சியைத் தொடங்குவது; பிடிக்கவில்லை என்றால் கலைத்துவிட்டு ஓடுவது...அரசியல் என்ன திருவிழாக்காலத்து 'சௌ' மிட்டாய்க் கடையா?! எம். ஜி. ஆரின் புகழ்பாடும் கலை வாரிசாக பணியைத் தொடர்வதாக பாக்கியராஜ் கூறியிருக்கிறார். இவரது 'பணி' என்னவோ மகத்தானது போன்று கலைத்துறையில் தொடரும் என்று கூறுகிறார். கலைத்துறைக்கு இவரே ஒரு பிணியாக இருக்கும் போது, பணி வேறு சேர்ந்தால்...மிச்சமிருக்கும் நல்ல கலையும் மடியும்.

''சில நிர்ப்பந்தங்களினால் கடந்த தேர்தலில் (சட்டமன்றத் தேர்தலின்போது) ஒரு முடிவு எடுத்தேன்; அது சில தர்மசங்கடங்களை ஏற்படுத்தியது. அதனால்தான் ஒட்டு மொத்தமாக அரசியல் வேண்டாம் என்று கருதினேன்'' (12.12.89 தினத்தந்தி) இதுவும் பாக்கியராஜின் அரசியல் துறவற அறிக்கையின் ஒரு பகுதிதான். எப்படியிருக்கிறது பாருங்கள்! இவருக்கு சில தர்மசங்கடங்கள் ஏற்பட்டதால், அரசியலிலிருந்து விலகிவிட்டாராம். 'அரசியல் ஞானத்தின்' அரிச்சுவடி கூட அறியாத கத்துக்குட்டியெல்லாம் கட்சி ஆரம்பித்தால், இப்படித்தான் ஓலமிடும். சங்கடம் ஏற்பட்டதாம் இவருக்கு! அரசியல் என்றால், ஐந்து நட்சத்திர ஓட்டலில், விசாலமான நீச்சல் குளத்தில், அழகிகள் புடை சூழ ரப்பர் டியூப்களில் மிதந்து கொண்டே மது அருந்தும் சுகத்தைக் கொடுக்கும் என்று பாக்கியராஜ் நினைக்கிறாரா? மக்களின் சங்கடங்களைப் போக்க, தங்களின் சங்கடங்களைப் பொருட்படுத்தாத மனப்பான்மையுடன்தான் அரசியலுக்கு நுழைய வேண்டும். மக்களை மடையர்களாக நினைக்கும் இதுபோன்ற மாய்மாலங்களை எப்படித் தண்டிப்பது? சமூகப்பிரக்ஞை உள்ள எந்த இளைஞனுக்கும், பாக்கியராஜின் அறிக்கையைப் படித்தவுடன், அவரை ஒருமையில் எச்சரிக்க வேண்டும் என்ற வெறி தோன்றும்! எனக்கும் தோன்றியது!

எம். ஜி. ஆர். மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலராக இருந்த ராஜா முகமதுவை கட்சியிலிருந்து நீக்குவதாக பாக்கியராஜ அறிவித்திருந்தார். அதற்குப் பிறகு கட்சியைக் கலைப்பதாகவும் அறிவித்தார். ராஜா முகமதுவால் இதைத் தாங்கமுடிய

# அரசியல் கடைகளைத் திறக்கும் சினிமா நடிகர்கள்

www.tamilarangam.net



வில்லை. 'கட்சியைக் கலைப்பதற்கு பாக்கிய ராஜுக்கு அதிகாரமில்லை' என்று அறிக்கை விட்டார். இது எப்படி இருக்கிறது? தமிழக அரசியலைப் பிடித்திருக்கும் தோஷம், தானாக விலகினாலும், அதை இழுத்துப் பிடிப்பதற்கு இது போன்ற உதிரிகள்! கட்சியை ஆரம்பித்த வரே கலைத்துவிட்டுப் போகிறார். இவருக் கென்ன வந்தது? இந்தியத் துணைக்கண்டத் தில் ஜனநாயகத்தை 'ஒத்தைக்கு ஒத்தை' நின்று நிலைநாட்டுவதாக ராஜா முகமதுவுக்கு நினைப்பு!

பாக்கியராஜ் கட்சியில் தனக்கு ஏற்பட்ட அவமானம் பொறுக்க முடியாமல் (அந்தக் கட்சியே ஓர் அவமானம் என்பது வேறு விஷயம்), ஓர் அறிக்கையில் தமிழக மக்களுக்கு தத்துவ முத்துக்களை அள்ளி வீசியிருக்கிறார். ராஜாமுகம்மது! "புதுக்கட்சி தொடங்க நினைப்பவர்களுக்கும், சிறு கட்சி வைத்து நடத்தவிரும்புவர்களுக்கும் ஒரு வேண்டுகோள்; தயவுசெய்து அதற்காக பணத்தையும், நேரத் தையும் வீணாக செலவழிக்க வேண்டாம்; ஏதாவது ஒரு பெரிய கட்சியுடன் இணைந்து விடுங்கள் என்பதுதான்".

ராஜாமுகமதுவின் இந்த அறிக்கை ஒன்று போதாதா? தமிழக அரசியலில் எப்படிப்பட்ட கடைத்தெடுத்த வியாபாரப் போக்கு தலை தூக்கியிருக்கிறது என்பதை உணர...! 'சிறு கட்சி' என்றால் ஏதோ சுமாராகத்தான் லாபம் தரும். அதனால், அதற்காக பொழுதையும், முதலையும் வீணாக்காமல் பெரிய கட்சியில் சேர்ந்துவிடுங்கள் என்பதுபோல எத்தனை வெளிப்படையாக ராஜாமுகமது அறிக்கை வெளியிட்டிருக்கிறார்! இது ஒருபுறமிருக்கட்டும்.

அரசியல் கடை போணியாகாமல் பாக்கிய ராஜ் மூடிவிட்டுப் போய்விட்ட நிலையில், புதிதாக இன்னொருவர் கடைவிரித்திருக் கிறார். கலைஞரின் தீவிர பக்தனாக இருந்து, ஜெயலலிதாவை கடுமையாகத் தாக்கி, பின்னர் ஜெயலலிதா ஆதரவாளராக மாறி கலைஞரை தீவிரமாக எதிர்த்து, கடைசியில் சொந்தமாகவே ஒரு கட்சியைத் தொடங்கியிருக் கிறார் 'எதுகை, மோனை கிங்' டி. ராஜேந்தர்!

ஒரு வெள்ளிக்கிழமையன்று காலை (டிச. 15ஆம் தேதி) நல்ல நேரம் பார்த்து, யாகம் நடத்தி கட்சியைத் தொடங்கியிருக் கிறார் ராஜேந்தர். நாள், நட்சத்திரம் பார்த்து, கட்சித் தொடங்குவதை ஒரு சமூகச் சடங்காக நடத்தும் இந்தக் கலாசாரத்தை என்னவென்று அழைப்பது?

'தாயக மறுமலர்ச்சிக் கழகம்! (Motherland Renaissance Party) என்பது அண்ணன் ராஜேந்தர் புது வியாபாரத்துக்கு வைத்துள்ள பெயர். 'சிலம்பகம்'தான் தலைமைக் கழகமாம்! அதற்குள், தலைமைக் கழகத்துக்கு தனிக் கட்டடமா என்று வியக்காதீர்கள். ராஜேந்தரின் வீடுதான் அது! அரசியலுக்காக, ஒரு 'போர்ஷனை' ஒதுக்கியுள்ளார்.

'சிலம்பகத்தின்' வாசலில் கொட்டும் மழையில் நனைந்தபடியே ராஜேந்தர் கொடி யேற்றி வைத்திருக்கிறார்! தாயக மறுமலர்ச்சிக் கழகத்துக்கு கொடி கூட உண்டு. அதற்கு கொள்கை விளக்கமும் உண்டு. ஆம்! தனது கட்சிக் கொடிபற்றி ராஜேந்தர் தந்திருக்கும் விளக்கம் இருக்கிறதே...அடடா! சொல்லி மாளாது போங்கள். பச்சை, மஞ்சள், சிகப்பு, கூப்பிய கரங்கள், வளையல்...என்று உலகத் தத்துவங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து... யாருக்கும் எதுவும் புரிந்துவிடக்கூடாது என்பதில்தான் எத்தனை உறுதி! கலைத்துறை யில் 'ஏழெட்டு' வேலைகள் தெரிந்தவராயிற்றே! அரசியலிலும் அதை நிரூபிக்க வேண்டாமா?

"என் கட்சியை பாக்கியராஜ் கட்சியுடன் ஒப்பிடாதீர்கள்; என் உயிரைக் கொடுத்தாவது நான் கட்சியை வளர்ப்பேன்." இது கட்சியின் கொடியேற்று விழா அன்று அண்ணன் ராஜேந்தர் செய்த பிரகடனம்! 'இவாளை' 'அவாளுடன்' ஒப்பிடக்கூடாதாம்! என்ன கூத்து இது? இரண்டு பேருமே நரகல் வியாபாரிகள் தானே!

தாயக மறுமலர்ச்சிக் கழகத்தில் உறுப்பினர் களாக சேர 9 லட்சம் பேர் இதுவரை விண்ணப் பித்துள்ளார்கள் என்று, தினசரி பத்திரிகை களில் அவரது திரைப்படங்கள் ஓடுவதற்கு விளம்பரம் கொடுப்பது போல பக்கம், பக்கமாக விளம்பரம் கொடுத்து வருகிறார்! தைபிறந்தால் வழிபிறக்குமாம்; அடுத்தமாதமே கட்சியின் தொடக்கவிழா இருக்குமாம்! இதுவும் ராஜேந்தர் கொடுத்த விளம்பரங்களில் உள்ள வாசகம்தான்!


அரசியலில் மட்டுமல்ல, சினிமாவிலும் பாக்கியராஜ், ராஜேந்தர் வகையறாக்கள் இனித் தோன்றாமலிருக்க என்ன செய்வது? சிந்திப்போம் தோழர்களே! மக்கள் இவர்களைப் புறக்கணித்துவிடுவார்கள் என்றோ, காம்ல பாடம் புகட்டும் என்றோ கூறி இதற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட முடியாது. சமூகத்தை ஏளனம் செய்யும் இதுபோன்ற மாய்மாலங் களை சந்தியில் தோலுரித்துக் காட்டுவதற்கு வழி என்னவென்று யோசிப்போம்!

—பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இயக்கச் செய்திகள்



## பிரசாரத்தில் புதிய பரிமாணம்

அந்தக் காலையில், ஊர்மக்களின் கவனம் முழுவதும் தெருக்களிலுள்ள சுவர்களிலும், மதில்களிலும், பாலங்களிலும் திரும்பியது.

முதல் நாள் இரவு உறங்கச் செல்லும் முன் தங்களைச் சுற்றி இருந்த பகுதிகளில் பார்க்க முடியாத ஒரு விஷயத்தைவிடிந்ததும் அந்த மக்கள் கண்டார்கள்.

மனித இனத்தின் நாகரீகத்தையே கேவலப்படுத்தும் போஸ்டர்கள் நிறைந்த சுவர்கள் எல்லாம், போஸ்டர்கள் கிழிக்கப்பட்டு வெள்ளை அடிக்கப்பட்டிருந்தது. பீடி, சுருட்டு, சோப் என்று திரும்பிய இடமெல்லாம் காணப்பட்ட விளம்பரங்களுக்கு பதில், ஏதோ சில புதிய விஷயங்கள் எழுதப்பட்டு இருந்தது. சிந்திக்கவைக்கும் வாசகங்களைத் தாங்கிக் கொண்டு சுவர்கள் கம்பீரமாகக் காட்சியளித்தன.

— துன்பப்படும் மக்களின் துயர்களுக்கு விடிவைக்காட்டி...

— அருமை மிகு தாயகத்தின் ஒற்றுமையை வலியுறுத்தி...

இப்படிப்பல வாசகங்கள்!

தொழிலாளிகள் — விவசாயிகளுக்கான கருத்துகளை யார் எழுதியது?

மக்கள் இப்படித்தான் வினவினார்கள்! அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் (AIYF) சுவர் எழுத்துப்பயிற்சி முகாம் மாநிலம் தழுவிய அளவில் காமராஜ் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற இளம் தோழர்கள்தான் ஒரே இரவில் இப்பணியினை செய்து முடித்தார்கள்.

பயிற்சிக்கு தேவையான உணவு, தங்குமிடம் ஆகியபொறுப்புகளை காமராஜ் மாவட்ட இளைஞர் மன்றக் குழுஏற்றுக் கொண்டது.

மாவட்டத்தலைவர் கேசவன், செயலாளர் சிங்கராஜ் இருவரும் உடனிருந்து எல்லாப்பணிகளையும் கவனித்திருக்கிறார்கள். கட்சியின் மாவட்டச் செயலாளர் தோழர் வெங்கிடசாமி துவக்க உரை நிகழ்த்தினார். 40-மாணவர், இளைஞர் பங்கேற்க இப்பயிற்சி முகாமிற்கு ஆசிரியராக கோவில்பட்டி சிவன், சிவகிரி தங்கவேல் ஆகியோர் பொறுப்பேற்று செயல்பட்டார்கள். பிரச்சார முறையில் நமக்கு கிடைத்த முதல் வெற்றி என்றுதான் இதனைக் குறிப்பிட வேண்டும். இந்த முறை தமிழகம் முழுவதும் பரவலாக்கப்படவேண்டும்.

ஆசிரியரும்இளைஞர் மன்ற நண்பருமான கோவில்பட்டிசிவன் கூறுகிறார்:

''இன்றைய முதலாளித்துவ உலகில் போஸ்டர், சுவர் விளம்பரம் என்ற பிரச்சார முறைக்கு, மிகக்கடுமையான செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தங்கள் உருவாகி உள்ளன. இடது சாரி இயக்கங்கள், மற்ற முதலாளித்துவ இயக்கங்களுக்கு ஈடுகொடுத்து முன்னேற வேண்டுமென்றால், காவி டப்பாக்களுடனும், பிரஷ்களுடனும், சுவர்களைத் தேடி அலையும் சமூகப் பிரக்ஞை மிக்க இளைஞர்கள் தேவை. ஆர்வமுள்ள எல்லா இளைஞர்களும் இதில் தேர்ச்சி பெறலாம். தமிழகம் தழுவிய அளவில் ஒரே இடத்தில், இப்படிப்பட்ட பயிற்சி முகாம்கள் நடைபெறுவதைவிட மாவட்டங்கள் தோறும் இத்தகைய முகாம்கள் நடைபெறுவது நல்லது. தமிழகத்தில் எந்த மூலையில் நடைபெற்றாலும் இதனை முக்கியப் பணியாகக் கருதி நான் பயிற்சி அளிக்கிறேன்.''

தமிழகத்தின் சிறந்த ஓவியர்களில் ஒருவரான தோழர்சிவன் அவர்களே இத்தகைய உதவிகள் செய்ய முன்வரும்போது நமக்கு வேலை சுலபம்தானே!

**மாவட்டங்கள் தோறும் பயிற்சி முகாம்களை உருவாக்கி பிரச்சாரத்தில் புதியபரிமாணங்களை உருவாக்குங்கள் தோழர்களே...!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## புதிய சரிதம் படைத்த நாகப்பட்டினம்

சமீபத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தேசிய அளவில் ஒரு புதிய மாற்றத்தைக் கொணர்ந்திருப்பது உற்சாகத்தைத் தருகிறது. எனினும், தமிழகத்தைப் பொருத்தவரையில் தி.மு.க. கூட்டணிக்கு ஏற்பட்டுள்ள பெரும் சரிவு நம்மை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. தமிழகம் உள்பட, தென்மாநிலங்கள் அனைத்தும் தந்துள்ள தேர்தல் தீர்ப்பை தீவிரமாக ஆராய்வது அவசியம். இது தனியாகச் செய்யப்பட்ட வேண்டிய விஷயம்.

''இந்தப் பின்னணியில் நாகப்பட்டினம் நாடாளுமன்றத்தொகுதி மக்கள் அளித்துள்ள தீர்ப்பு நமக்கு இதமாக இருக்கிறது. தமிழகத்திலுள்ள 39 இடங்களில், தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட பழநி தொகுதி நீங்கலாக 38 இடங்களுக்குத் தேர்தல் நடந்தது. இதில், ஒரே ஒரு தொகுதியைத்தவிர, மீதமுள்ள இடங்கள் அனைத்திலும் அ.தி.மு.க., இந்திரா காங்கிரஸ் கூட்டணியே வென்றது. இந்தக்கூட்டணி கைப்பற்றமுடியாமல் போன தொகுதிதான் நாகப்பட்டினம். அங்கு, தி.மு.க. கூட்டணி சார்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட செல்வராஜ், 21,523 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாகை சூடியிருக்கிறார். செல்வராஜ் பெற்ற மொத்த வாக்குகள் 3,41,921. இவரை எதிர்த்து காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட வீரமுரசு 3,20,398 வாக்குகள் பெற்று தோல்வியைத் தழுவியுள்ளார்.

இதே தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட கே. அம்பிகாபதி வெறும் 1295 வாக்குகளே பெற முடிந்துள்ளது. தராசு மக்கள் மன்றம் சார்பாக இந்தத் தொகுதியில் போட்டியிட்ட கே. தியாகராஜன் 2561 வாக்குகள் பெற்றிருக்கிறார். பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் வி. எஸ். தங்கராஜ் 25,516 வாக்குகள் பெற்று மூன்றாவது இடத்தில் உள்ளார். அமைப்பு ரீதியாகவும், தொண்டர்கள் ரீதியாகவும் பலம் வாய்ந்த தி.மு.க. கூட ஒரு இடத்தில் கூட வெற்றிபெற முடியாத நிலையில், செல்வராஜ் மட்டும் வெற்றி பெற்றிருப்பது, நாகப்பட்டினம் மக்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையின் ஆழத்தையே காட்டுகிறது. பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் கணிசமான அளவு வாக்குகளைப் பிரித்தும் கூட அதையும் முறியடித்து செல்வராஜுவால் வெற்றிபெற முடிந்திருக்கிறது. இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் தி.மு.க. தோழர்களின் கடுமையான உழைப்பை இந்த வெற்றிக்கு உரம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

1977 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில், இதே நாகப்பட்டினம் தொகுதியில் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் எஸ். ஜி. முருகையன் 40,811 வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி கண்டார். ஆனால், 1980 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், தி.மு.க. வேட்பாளர் தாழை மு. கருணாநிதி 10,700 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கண்டு இத்தொகுதியைக்கைப்பற்றினார். கடைசியாக, 1984 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், அ.தி.மு.க. வேட்பாளர் எம். மாகலிங்கம் சொற்ப வாக்குகளில் அதாவது 2, 289 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். இரண்டு தேர்தல்களுக்குப்பிறகு, மீண்டும் இந்தத் தொகுதியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த வெற்றியைப் பெற்றிருப்பவர், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநிலத்துணைச்செயலர் என்பது இரட்டிப்புச் சந்தோஷத்தைத் தருகிறது. கடந்த இதழில், நாகப்பட்டினம் வாசிகள் செல்வராஜுவின் குரலை நாடாளுமன்றத்தில் ஒலிக்கச்செய்வார்களா? என்ற கேள்வியையும், எதிர்பார்ப்பையும் எழுப்பிருந்தோம். நாகப்பட்டினம் மக்கள் அதற்கு நல்ல விடை அளித்திருக்கிறார்கள். இனி, அவர்களின் நம்பிக்கையைக் காப்பாற்றுவது தோழர் செல்வராஜுவின் பணி அவருக்கு ஒத்துழைப்புத்தருவது நமது கடமை. தமிழக மக்களுக்காக தலைநகரில் குரல்கொடுக்கப்புறப்பட்டுள்ள தோழர் செல்வராஜுவுக்கு, புதியஇளைஞன்' சார்பாக இதயப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### நன்றி !

புதிய இளைஞனை வாழ்த்தி வரவேற்றுள்ள 'DYFI இளைஞர் முழக்கத்துக்கு' நன்றி ! நன்றி ! DYFI இளைஞர் முழக்கம் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் (DYFI) தமிழ் மாநிலக்குழு சார்பில் வெளிவரும் மாத இதழ்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு பொய்க்கால் குதிரையின் பந்தயக் கனவு

செல்வி ஜெயலலிதா வழக்கம்போல் பொது வாழ்க்கையைத் துறந்து, வழக்கம் போல் தனது முடிவை மாற்றிக் கொண்டு வழக்கம் போல் அ. தி. மு. க. வை வழி நடத்த முன் வந்திருக்கிறார்.

பொது வாழ்க்கையில் நீண்டகாலம் களம் பல கண்டு தியாகத்தழும்பேறிய (!) இந்த அம்மையார், தன்னை அரசியலுக்கு அறிமுகம் செய்த எம். ஜி. ஆர். உயிரோடிருந்த காலத்திலேயே, அரசியல் துறவறம் பூண முன் வந்தவர். ஆயினும் அன்னை சத்யா மீது ஆணையிட்டு, அரசியலில் நிலைத்து நிற்கப் போவதாக எம். ஜி. ஆருக்கு சத்தியம் செய்து கொடுத்து அ. தி. மு. க. வில் நீடித்தார். எம். ஜி. ஆர். மறைவுக்குப் பின் அதிகாரத்தைப் பங்குபோட ஏற்பட்ட கோஷ்டி சண்டையின்போது இதை அவரே தெரிவித்தார். அதற்குப்பின் கடந்த மார்ச் 18-ம்தேதி வெளியான ஓர் அறிக்கையில் மீண்டும் அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். சட்டப் பேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விடுவதாகவும் கூறியிருந்தார். இடையில் எத்தனை தடவை அரசியல் வாழ்வை துறந்தார், திரும்பினார் என்பது பகிரங்கப் படுத்தப்படவில்லை. எனவே இம்மாதம் 18-ம் தேதி அரசியல் வாழ்வைத் துறந்ததாக மீண்டும் அவர் அறிவித்ததை 3-வது துறவு எனலாம்.

எம். ஜி. ஆரின் இலட்சோபலட்சம் 'ரத்தத்தின் ரத்தங்கள்' அடங்கிய மாபெரும் இயக்கத்தின் ஒப்பற்ற, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு பெரும் தலைவரின் மன உறுதி மலைக்க வைக்கிறதல்லவா!

எம். ஜி. ஆருக்கு பின் அவரது தொண்டர்களின் தோள்மீது சவாரி செய்து அரியணை ஏறவேண்டும் என்பதுதான் இந்தத் தேவதையின் ஒரே கனவு. இதுபலிக்காது என்று தோன்றியபோதெல்லாம், இவருக்குத் துறவு மனப்பான்மை வந்து விடுகிறது. அதிகாரம் இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி மக்கள் பணியை நிறைவேற்ற நினைப்பவர்கள் தான் பொது வாழ்வுக்கு வருவார்கள். அரியணைக் கனவுகளுடன் அரசியலில் வருபவர்களுக்கு, அது நனவாகாது எனத்தோன்றும் போதெல்லாம் 'மக்கள் பணியாவது மண்ணாங்கட்டியாவது' என்ற எண்ணம் ஏற்படுவது இயல்பே. ஏனெனில் அவர்கள் பெரும் ஆதாயத்தை நினைத்து அரசியல் தொழில் நடத்தும் வியாபாரிகள். எதிர்பார்த்த லாபம் இல்லையென்றால் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லிவிட்டு வேறு தொழிலில் இறங்க அவர்கள் தயங்குவதில்லை. இந்த ரகத்தை, வர்க்கத்தைச் சேர்ந்தவர்தான் ஜெயலலிதா.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அவரது கனவு பலிக்காததால் அரசியல் துறவறம் பூண முன்வந்தார். ஆனால் அவரது ராஜினாமா கடிதமும் அறிக்கையும் வெளியான விதம், அவரது மனஉறுதியைப் பற்றி மதிப்பீடு செய்ய முடியாதபடி மக்களைத் திசை திருப்பி விட்டது. எம். ஜி. ஆரின் பிம்பமாகச் ஜோடனை செய்யப்பட்ட அவர் இல்லாவிட்டால், தாங்கள் பூஜ்யமாகிவிடவேண்டியது தான் என நினைக்கும் சில அ. தி. மு. க. 'மூத்த தலைவர்கள்', அவரை எப்படியாவது அரசியலில் தக்க வைத்துக்கொள்ளவேண்டும் என்ற முயற்சியில் வெற்றி பெற்றனர். ஆளுங் கட்சியின் ஆலோசகர்களாகத் திகழும் உயர்அதிகாரிகளும், அவர்களது ஆணைப்படி நடக்கும் போலீசாரும் ஜெயலலிதா கடிதத்தை அம்பலப் படுத்துவதில் காட்டிய ஆர்வக் கோளாறும், அதையடுத்து சட்டப்பேரவையில் நடந்த சம்பவங்களும் அந்த அம்மாளுக்கு ஓர் அனுதாபத்தையும் அரசியல் செல்வாக்கையும் அளிக்க வழிவகுத்துவிட்டன.

இந்த நிலையில், மக்களவைத் தேர்தலை மனதில் கொண்டு இ. காங்கிரஸ் கட்சியும்

**எம்.ஜி.ஆருக்குப் பின் அவரது தொண்டர்களின் தோள்மீது சவாரி செய்து அரியணை ஏறவேண்டும் என்பதுதான் இந்தத் தேவதையின் கனவு. இது பலிக்காது என்று தோன்றிய போதெல்லாம் இவருக்குத் துறவு மனப்பான்மை வந்து விடுகிறது.**

www.tamilarangam.net





அவருக்கு ஆதரவு அளிக்க முன்வந்தது. இதற்குக்காரணம் எம். ஜி. ஆர். மறைவுக்குப் பின் அ. தி. மு. க. வில் பிளவை ஊக்குவித்து, அரசைக் கவிழ்த்து, ஆளுநர் ஆட்சியின் மூலம் தாங்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறிவிடமுடியும் என்ற அவர்களது கற்பனை கைகூடாததே. திராவிடக் கட்சிகளின் கூட்டு இல்லாமல், தனியாக தங்களின் அரசியல் வியாபாரம் நடக்குமா என்பதை சட்டப்பேரவைத் தேர் தலில் பரீட்சித்துப் பார்த்த அவர்கள், மக்கள வைத் தேர்தலில் அத்தகைய பரிசோதனை எதற்கும் தயாராக இல்லை. ஏனெனில் வட நாட்டில் சரிந்துவரும் தங்கள் செல்வாக்கை தென்னாட்டில் ஈட்டும் வெற்றியின் மூலம் சரிக்கட்டி மத்திய ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள அவர்கள் நினைத்தார்கள். எனவே அ. தி. மு. க. வுடன் கூட்டு சேருவதற்குரிய ஆயத்தங்களில் தீவிரமாக இறங்கினர். மக் களவைத் தேர்தல் நெருங்கியதும் பேரம் பேசப்பட்டது.

'காங்கிரஸ் வெற்றி பெற்று மத்தியில் மீண்டும் ஆட்சியை அமைத்தவுடன் தி. மு. க. ஆட்சியைக் கலைக்க வேண்டும். அதை முன்னிலைப்படுத்தி சட்டப்பேரவைத் தேர் தலை நடத்த வேண்டும். தேர்தல் முடிந்ததும் என்னைத் தமிழகத்தின் முதல்வராக முடிசூட்ட வேண்டும்' என்று ஜெயலலிதா விதித்த நிபந்தனையை ஏற்றுக் கொள்வதுபோல தலை யாட்டி, அதிகத் தொகுதிகளை (புதுவையைச் சேர்த்து 29 இடங்களை) இ. காங்கிரஸ் பெற்று மக்களவைத் தேர்தலை சந்தித்தது.

## குமரிப் பெண்ணின் தலையில் பேரிடி!

மக்களவைத் தேர்தலில் இ. காங்கிரஸ் வெற்றி பெறும், தமிழக அரசு கலைக்கப்படும், சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும்; அடுத்த முதல்வர் நாமே' என்று எதிர்பார்த்த ஜெயலலிதாவுக்கு மத்தியில் தேசிய முன்னணி ஆட்சி ஏற்பட்டது பெரிய இடியாக விழுந்தது. அதனால்தான் தமிழகத்தில் தாங்கள் பெற்ற வெற்றியைக் கொண்டாட முடியாத அளவுக்கு அ. தி. மு, க. முகாம் களையிழந்து காணப் பட்டது. இதையடுத்து அரசியலில் இருந்தும் பொதுவாழ்க்கையிலிருந்தும் விலகிக் கொள்வ தாக இம்மாதம் 18-ம்தேதி செய்தியாளர்களை அழைத்து ஜெயலலிதா நேரில் அறிவித்தார். இந்த முடிவில் மாற்றம் இருக்குமா என பழையவற்றை மறக்காத சில நிருபர்கள் சந்தேகத்துடன் கேட்டனர். இந்த முறை துறவு துறவுதான்; யார் சொன்னாலும் மீண்டும் வரவு இல்லை என்பதை அடித்துச் சொன்னார், அம்மையார்.

ஆனாலும் அவரது முடிவை மாற்றும் முயற்சியில் 'மூத்த தலைவர்கள்' மீண்டும் வெற்றி பெற்றுள்ளனர். எம்.ஜி.ஆர். முன்னி லையில் மட்டுமல்ல, அவர் இடத்தில் அமர்த் தப்பட்டுள்ள ஜெயலலிதா முன்னிலையிலும் தாங்கள் 'ஜீரோக்களே'; எனவே பூஜ்யங் களுக்கு மதிப்பு கிடைக்க வேண்டுமானால் அவற்றுக்கு முன் ஓர் இலக்கம் தேவைப்படு கிறது என்பதை இந்தத்தானைத் தலைவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதனால்தான் தமிழகத்தில் அண்மையில் பெற்ற வெற்றிக்குத் தாம் மட்டுமே காரணம் என்ற ஆணவம் ஜெயலலிதாவின் துறவு அறிக் கையில் கூட காணப்பட்டது. தன்னை விட் டால் இவர்களுக்கு வேறு ஆள் கிடையாது என்ற மமதையும் அவரிடம் இருக்கிறது. வசந்தசேனை, மயக்கும் மோகினி, மேனா மினுக்கி என்று வசைபாடிய வீரப்பன், காளி முத்து, நெடுஞ்செழியன் வகையறாக்கள், சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அவரது ஆசிக்கும் அனுக்கிரகத்துக்கும் யாசித்து நிற்கும் போது, தமது மகிமை பற்றி செல்வி செருக் கடையத்தானே செய்வார்.


## பாவையின் பாவம் அகம்பாவம் !

வெற்றியில் மற்றவர்கள் பங்குக்கு வந்து விடக் கூடாது என்பதற்காக, இயக்கத்தில் தன்னைத் தவிர வேறு எவரும் தலைவர் என்று சொல்லிக் கொண்டு பிரசாரத்துக்குப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





போகக் கூடாது என்று தேர்தல் நேரத்தில் அவர் கட்டளையிட்டார். அப்படியே தன்னுடன் வரும் துதிபாடித் தலைவர்கள் கூட மேடையில் தனக்குச் சரிசமமாக அமர்ந்து விடக் கூடாது; அடக்கமாக ஓர் ஓரத்தில் நின்று கொண்டுதான் இருக்கவேண்டும் என்பதில் கவனமாக இருந்தார்.

இத்தனைக்குப் பின்னரும் இவரைத் தங்கள் தலைவராக இந்தத் 'தன்மானத் தளபதிகள்' வலிந்து, கெஞ்சி-மன்றாடி இருத்திவைப்பதற்குக், காரணம் என்ன ? ஏற்கெனவே கூறியதைப் போல பூஜ்யங்களுக்கு மதிப்புச் சேர்க்கும் எம். ஜி. ஆரின் பிம்பமாக மாயத்தோற்றம் அளிக்கும் ஜெயலலிதாவாக இருப்பது இப்போதைய யதார்த்தம். இதற்குப் பின்னணி, எம்.ஜி..ஆர். மீது கண்மூடித்தனமாக பக்தி கொண்ட அவரது ரசிகர்கள், எம் ஜி. ஆருடன் சினிமாவில் கதாநாயகியாக நடித்த ஜெயலலிதாவை அவரது அரசியல் வாரிசாக கருதுகிறார்கள்.

### பிதாமகன் 'காவல்காரன்' !

**எம். ஜி. ஆர். மீது இந்த மூடபக்தி எப்படி ஏற்பட்டது ?**

சிறுவயதில் ஒருவேளைச் சோற்றுக்கு அடுத்த வீட்டாரின் இரக்கத்தை எதிர்பார்த்திருந்தவர்; நாடகக் கம்பெனியில் வெறும் சோற்றுக்காக வதைபட்டவர்; பஸ்ஸுக்குக் காசு இல்லாமல் கால்கடுக்க நடந்தவர்; கஷ்ட-நஷ்டங்களை அனுபவித்தவர்; எனவே எம்.ஜி.ஆர். 'நம்மவர்' என்று அன்றாடங்காய்ச்சிகள் நினைத்தனர்.

திரைப்படங்களில் தொழிலாளியாக, ரிக்‌ஷாக்காரனாக, படகோட்டியாக, விவசாயியாக, காவல்காரனாக, மீனவ நண்பனாக, மாட்டுக்காரவேலனாக, சமுதாயத்தின் அடித்தட்டு மக்களில் ஒருவனாகத் தோன்றி, ஆதிக்க சக்திகளைத் தனியொரு மனிதனாக எதிர்த்து நின்று வீழ்த்தும் எம். ஜி. ஆரைக் கண்டு பாமர மக்கள் பரவசமடைந்தனர். பண்ணையார்கள், ஆலை அதிபர்கள், அதிகார வர்க்கத்தினர், மேட்டுக்குடியினர் ஆகியோரின் அடக்குமுறைக்கு ஆளாகி அன்றாடம் அல்லல்படும் தாங்கள் சாதிக்க முடியாததை, தங்களைப் போன்ற ஒடுக்கப்பட்ட மக்களில் ஒருவனாகத் தோன்றி எம். ஜி. ஆர். சாதித்துக் காட்டுவதைப் பற்றி அவர்கள் சிலாகித்துப் பேசினர். நான் 'உங்கள் வீட்டுப் பிள்ளை' என்று யாரோ எழுதிக் கொடுத்ததை அவர் பாடியதைக் கேட்டு அவர்கள் நெகிழ்ந்து போயினர். நிஜ வாழ்க்கையிலும் அவர் அப்படியே என நினைத்து அபிமானம் கொண்டனர். அவர் 'இட்டது கட்டளை; சொன்னது வேதம்' என நினைக்கும் அளவுக்கு வெறி கொண்ட பக்தியாக அவரது ரசிகர் மத்தியில் இது வேரோடியது.

சினிமா மூலம் உருவாக்கப்பட்ட இந்த மாயையில் ஈர்க்கப்பட்ட ஆயிரமாயிரம் இளைஞர்கள் அவரது ஆதரவுத் தளமாக இருந்தனர். அல்லல்படும் மக்களின் ஒரு பிரிவினருக்கு புதிய இரட்சகனாக அவர் தோற்றமளித்தார். இதனால்தான் அ. தி. மு. க ஆரம்பிக்கப்பட்ட 5 ஆண்டுகளில் அவரை அவர்கள் அரியணை ஏற்றி வைத்தனர். 'நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்...' என்று பாடியவர், ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பின்னர் என்ன செய்தார் என்பது தனிக்கதை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆயினும் அவர் மீது வைத்திருந்த காரண காரியமற்ற பக்தி, அவரை விமர்சன ரீதியாகப் பார்க்க விடாமல் தடுத்தது; அரசியல் ரீதியாக அவரை விமர்சித்தவர்களை, ஜென்மப் பகைவர்களைப் போல் பார்க்கும்படிச் செய்தது. அவர் ஆதரித்தவர்களை இவர்களும் ஆதரித்தனர். அவர் ஆராதிக்கச் சொன்னவர்களை இவர்களும் ஆராதித்தனர். அப்படி ஆராதனைக்குரியவராக அமர்த்தப்பட்டு, ரசிகர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்தான் எம். ஜி. ஆரின் திரையுலகக் கதாநாயகி ஜெயலலிதா.

தாங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ள எம். ஜி. ஆர். எவரையும் வெல்லக் கூடிய வீரன் மட்டுமல்ல, பேரழகன் என்பது அவரது ரசிகர்களின் பெருமிதம். தாங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ள எம். ஜி. ஆரின் இடத்தை வகிக்கக் கூடிய வரும் அழகு நிறைந்தவராகவே இருப்பது; அவர்களின் உள்ளார்ந்த எதிர்பார்ப்பை ஈடு செய்யக் கூடியதாக உள்ளது. அழகுக்கு அரசியலில் எவ்வளவு மரியாதை பாருங்கள். ஜெயலலிதா மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவையின் கவர்ச்சிகரமான உறுப்பினர் (எம். பி.) என்று அந்த அவையின் முதிய உறுப்பினரான பிரபல பத்திரிகையாளர் குஷ்வந்த் சிங்கே குதுகலம் அடைந்தபோது, இவர்கள் எம்மாத்திரம்!

'எம். ஜி. ஆர். முகத்தைக் காட்டினால் 3 லட்சம் வோட்டு' என்று முன்பொருமுறை அண்ணா கூறினாராம். ஜெயலலிதா முகத்தைப் பார்க்க இப்போது எத்தனை லட்சம் பேர் கூடுகிறார்கள்? எம். ஜி. ஆருக்காவது இளமையிலிருந்தே அரசியல் ஈடுபாடு உண்டு. ஆனால் ஜெயலலிதாவுக்கு எம். ஜி. ஆரின் கதாநாயகி என்பதைத் தவிர வேறு என்ன தகுதி இருக்கிறது?

மன்னனுக்குப்பின் அவனது வாரிசு அரியணை ஏறவேண்டும் என்ற நிலபிரபுத்துவக் கருத்து மறையவில்லை என்பதற்கும் இது ஓர் எடுத்துக்காட்டு. வாரிசு என்றால் மனைவி, மக்கள் மட்டும்தானா? ஆர்ஜெண்டினாவில் அதிபர் பெரானின் ஆசைக்குரிய நாயகி அரியாசனம் மீது ஆசை கொள்ளவில்லையா? அதுபோல் இங்கே எம். ஜி. ஆரின் மறைவுக்குப்பின் 'உடன்கட்டை' ஏற நினைத்ததாகக் கூறிய ஜெயலலிதா, அரியாசன உரிமை தனக்கே என்று குரல் எழுப்பினர்.

இவர் அரசியலில் நீடிக்க வேண்டும் என்று பல்வேறு சுயநலசக்திகள் விரும்புகின்றன. எம். ஜி. ஆரின் தொண்டர் படையைப் பயன்படுத்தி மீண்டும் ஆட்சியைப் பிடிக்க பரம்பரை ஆட்சி நடத்தியவர்கள் பகற்கனவு காணுகிறார்கள். இதனால் தான் ஜெயலலிதா, அரசியல் துறவறம் பூண்டதாகக் கூறியதும் பதறிப்போன ராஜீவ்காந்தி டெலிபோன் மூலம் அவரைத் தொடர்பு கொண்டு, அரசியலில் நீடிக்கும்படி மன்றாடி சம்மதிக்க வைத்திருக்கிறார். தற்போது மத்தியிலுள்ள ஆட்சி அதிகநாள் நீடிக்காது. அடுத்தது 'நாம்தான்' என்று அவர் ஆசைவார்த்தை கூறியிருக்கலாம். அம்மையாருக்கு அரியாசனக் கனவு நனவாகி விடும் என்ற நம்பிக்கை மீண்டும் துளிர்விட்டிருக்கலாம்.

ஜெயலலிதா அதிகாரத்தைப் பிடித்துவிட வேண்டும் என்ற துடிப்பு, காலங்காலமாக அடித்தட்டுமக்களை அமுக்கிவைத்திருந்த ஆதிக்கசக்திகளுக்கும் அதிகம் இருக்கிறது. சமுதாயப்படிக்கட்டில் இடைநிலைப்பிரிவினரின் அரசியல் வளர்ச்சியால், தங்கள் செல்வாக்கை இழந்த இவர்கள், ஜெயலலிதாவை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, மீண்டும் ஆதிக்கத்தைக் கைப்பற்ற நினைக்கிறார்கள். கடந்த தேர்தல்களில் தங்கள் சமுதாய சங்கங்கள் மூலம் ஜெயலலிதாவுக்கு ஆதரவாகத் தீர்மானமே போட்டனர். இவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள் அவருக்கு அளவுக்கு மீறி விளம்ரம் தந்து பிரசாரம் செய்துவருகின்றன.

எம்ஜிஆரின் ஆதரவாளர்களான அடித்தட்டிலுள்ள ஏழை எளிய மக்கள், எம்ஜிஆரின் வாரிசாகத் கருதும் ஜெயலலிதாவில் எம்ஜிஆரைக் காண நினைக்கிறார்கள். எனவே இவர் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றால், தங்கள் வாழ்வே அஸ்தமித்துவிடும் என்று பல தொண்டர்கள் அஞ்சுகிறார்கள். இந்த அச்சமும், எம்ஜிஆர் மீது கொண்ட வெறித்தனமான பக்தியும்தான் சில தொண்டர்களை தீக்குளிக்கவும் விஷம் அருந்தவும் தூண்டுகிறது. தேவதைக்காகத் தங்களையே பலியிடத்தயாராக இருக்கும் மூடப்பக்தர்கள் இருப்பது பூசாரிகளுக்கு கொண்டாட்டம்தானே! ஏனெனில் இந்தத்தேவதையின் கருணைக்கடாட்சத்தைப் பெறப்போவது, அப்பாவி ஏழை மக்களல்ல, தாங்களே என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

இதே அடிப்படையில்தான் சாராய சாம்ராஜ்யங்களும், பணமுதலைகளும்கூட, திரைமறைவிலிருந்து ஜெயலலிதாவுக்குத் தீவிர ஆதரவு அளித்து வருகிறார்கள். ஏனெனில் உழைக்கும் மக்களுக்கு எதிரான சிந்தனையும், கலாசாரப் பின்னணியும் கொண்ட ஜெயலலிதா, சில ஆண்டுகளுக்கு முன் 'துக்ளக்' பத்திரிகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 'சுருங்கச் சொல்லக் கூடாதா'

'புதிய இளைஞனை' சந்தித்த தோழர்கள் பலர் உற்சாகமூட்டும் வகையில் கடிதம் எழுதியுள்ளனர். அவர்களின் ஆதரவுக்கும், வாழ்த்துக்கும் நன்றி!

பல தோழர்கள், கட்டுரைகள் இன்னும் சுருக்கமாக இருக்கவேண்டும் என்று யோசனை தெரிவித்துள்ளனர். சிலர், 2 பக்கங்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்று தெரிவித்துள்ளனர். எந்த விஷயமும் சுருக்கமாகச் சொல்லப்பட வேண்டும் என்பது வரவேற்கத் தகுந்ததுதான். ஆனால், ஒரு கட்டுரையில் அலசப்படும் பிரச்சினையைப் பொறுத்தே, அதன் அளவும் தீர்மானிக்கப்படுகிறது. ஒரு விஷயத்தை முழுமையாகச் சொல்ல வேண்டுமானால், அதன் அளவு அதற்கு தடையாய் இருத்தல் கூடாதல்லவா? எனினும் இயன்ற அளவுக்கு கட்டுரைகளின் நீளத்தைக் குறைக்க முற்படுகிறோம். ஆனால், கட்டுரையை சுருக்கமாகத் தரவேண்டும் என்பதற்காக, விஷயத்தை சுருக்கிக் கொள்வது அரைகுறையாகவே இருக்கும். மேலும், முதலாளித்துவ, வியாபாரப் பத்திரிகைகளைப்போல, எல்லாவற்றையும் வெறும் பரபரப்புக்காக, மேலோட்டமாக நாம் கொடுக்கமுடியாது. பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கும் பட்சத்தில், நாம் நிறையப்படித்துதானே ஆகவேண்டும்.

'துணுக்குகள்' நிறைய இடம் பெற வேண்டும் என்று சில நண்பர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். இதுவும், புதிய இளைஞனுக்கு ஏற்புடையதல்ல. ஏனெனில், எல்லா விஷயங்களையும் துணுக்குகளாகக் கொடுக்க முடியாது. அத்துடன், துணுக்குகள் இடம் பெறவேண்டும் என்பதற்காக, துணுக்குகளை பிரசுரிக்க முடியாது. அது, காலப்போக்கில் கல்கண்டு, முத்தாரம் பாணியில் போய் நிற்கும். நமது நோக்கம் அதுவல்ல! அடுத்துவரும் இதழ்களில், சில நல்ல விஷயங்களை, அதாவது நல்ல துணுக்குகளை தர முயற்சிக்கிறோம்.

தோழர்களிடமிருந்து எதிர்பார்த்த அளவுக்கு படைப்புகள் வராதது ஏமாற்றத்தை அளிக்கிறது. கவிதைகள், அரசியல், இலக்கியக் கட்டுரைகள் போன்றவற்றை, தோழர்கள் புதிய இளைஞனுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். மற்றபடி, தொடர்ந்து உங்களின் ஆதரவையும், யோசனைகளையும் எதிர்பார்க்கிறோம்.

—ஆசிரியர் குழு

---

மூலம் வெளியிட்டு வந்த முதலாளித்துவக் கருத்தோட்டம் பற்றி ஏழை எளிய மக்களுக்குத் தெரியாவிட்டாலும், இவர்களுக்கு நன்றாக தெரியும்.

### *சவால்! மிகப்பெரிய சவால்!*

எம்ஜிஆர் மீதான பக்தி, திரைப்படக் கவர்ச்சி, பரம்பரை ஆட்சி, அதிகாரத்தை இழந்தவர்கள், பணமுதலைகளின் ஆதரவு, ஆதிக்க சக்திகளின் விளம்பரம் ஆகியவற்றின் மூலம் எளிய மக்களைத் தொடர்ந்து மாயையில் ஆழ்த்தி, ஜெயலலிதாவை அரசியல் சக்தியாக நிலைநிறுத்த தீவிர முயற்சி நடந்து வரும் இந்த நிலையில், தமிழகத்தில் உழைக்கும் வர்க்க அரசியல் கட்சிகளையும், இயக்கத் தொண்டர்களையும் மிகப்பெரிய சவால் எதிர் நோக்கியுள்ளது. ஏழை எளிய மக்கள் உண்மையை உணர்ந்து, தாங்கள் இருக்கவேண்டிய இடத்தைக் கண்டறியும்படிச் செய்வதே அது. இதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் அறிவொளி பரப்பும் பாசறையாக இடதுசாரி இளைஞர் அமைப்புகள் ஏற்படவேண்டும். சாதி, சமயம், தனிநபர்வழிபாடு ஆகியவற்றால் எளிதில் ஈர்க்கப்படும் நிலையிலுள்ள அப்பாவி ஏழை எளிய மக்களின் நம்பிக்கையை நமது அர்ப்பண உணர்வு, அயராத உழைப்பு, சலியாத சமுதாய சேவை, தளராத நியாயப் போராட்டம் ஆகியவற்றின் மூலம் பெறுவது அத்தியாவசியம். அதன்பிறகே, தாங்கள் செல்லவேண்டிய பாதையை அவர்கள் கண்டு உணரும்படிச் செய்யமுடியும்.

—நன்மாறி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பணம், புகழ், அந்தஸ்து இவைகளை மீறி குடிசைவாசிகளின், பாதிக்கப்பட்ட பெண்களின் இதயங்களில் ஷப்னா

தில்லியில் சர்வதேச திரைப்படவிழா நடந்து கொண்டிருக்கிறது. அப்போதைய மத்திய தகவல், ஒலிபரப்புத்துறை அமைச்சர் எச். கே. எல். பகத் உள்பட, முக்கியமான அரசியல், கலை உலகப் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருக்கின்றனர். இந்தித் திரைப்பட உலகின் மிகச்சிறந்த நடிகைகளுள் ஒருவரான ஷப்னா ஆஸ்மியும் விழாவில் கலந்து கொள்கிறார். பேசுவதற்காக மேடைக்கு அழைக்கப்படுகிறார். அவர் பேசி முடித்து விட்டு இருக்கைக்குத் திரும்பும்போது மேடையில் அமர்ந்திருந்த ஆட்சியாளர்களின் முகத்தில், வி. வி. ஐ. பி.க்களின் முகத்தில்...இருள் கப்பிக்கிடக்கிறது. எந்தவித படபடப்பும் இல்லாமல் ஷப்னா இருக்கைக்கு சென்று அமர்ந்து கொள்கிறார். அப்படி என்னதான் ஷப்னா பேசிவிட்டார்? இந்திரா காங்கிரஸ் காலிகளால் கோரமாகக் கொலை செய்யப்பட்ட வீதி நாடகக் கலைஞன் ஷப்தர் ஹஸ்மிக்காக ஷப்னா இந்த மேடையில் பகிரங்கமாகக் குரல் கொடுத்தார். தன்னைப் பாதிக்கும் ஒரு சமூக நிகழ்வை, அதுவே சக கலைஞனின் கோர மரணமாக இருக்கும் பட்சத்தில் இதைவிட ஆக்ரோஷமான வடிவத்தில் எப்படி ஒரு திரைப்பட நடிகையால் வெளிப்படுத்தி விடமுடியும்? ஷப்னா யாரென்று இனங்கண்டு கொள்ள இது ஒன்று போதும்...!

சினிமா நட்சத்திரங்களை மக்களிடமிருந்து பிரிக்கும் இரும்புத்திரைகளான பணம், புகழ், அந்தஸ்து இவைகளை மீறி பம்பாய் குடிசைவாசிகள், பாதிக்கப்பட்ட பெண்களின் இதயங்களில் அழியாத இடம் பெற்றிருப்பவர் ஷப்னா. தான் எதிர்கொள்ள நேர்ந்த முக்கியப் பிரச்சினைகள் குறித்து தீர்க்கமான கருத்து கொண்டிருப்பவர் அவர். சமீபத்தில் 'டெபோனர்' ஆங்கில இதழ் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியை 'புதிய இளைஞனுக்காக' தமிழாக்கம் செய்து தருகிறோம்.

□ □ □

**நிருபர்:** நடிகர் நசிரூதின் ஷா, சென்ற ஆண்டு அளித்த பேட்டி ஒன்றில் நடிகர் ஒருவர் கொள்கைப் பிடிப்புடன் இருக்க முடியாது என்று கூறியிருக்கிறார். ஹீரோவா, வில்லனா என்று பார்க்காமல் எந்தப் பாத்திரம் கிடைக்கிறதோ அந்தப் பாத்திரத்தில் நடிக்கவேண்டியதுதான் நடிகனின் வேலை என்று அவர் கூறியிருக்கிறார். அது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**ஷப்னா:** எந்தப் பாத்திரம் கிடைக்கிறதோ, அந்தப் பாத்திரத்துக்கேற்ப நடிக்க வேண்டியதுதான் நடிகனின் அடிப்படையான வேலை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அதுதான் தன்னுடைய கடமை என்று ஒருநடிகர் ஏற்றுக் கொண்டு விட்டால் அந்த வாதம் சரியானதுதான். ஆனால் கலை என்பது முதலில் அந்தக் கலைஞனுக்கு உணர்வூட்டுகிறது. அந்தக் கலைஞன் மூலம் அவனைச் சுற்றியுள்ள சூழ்நிலைக்கும் உணர்வூட்டப்படுகிறது. நீங்கள் நடிப்புக்கலையின் நுணுக்கங்களையெல்லாம் கற்று அற்புதமாக நடிக்கலாம். அதனால் அந்த நடிகருக்கு ஏற்படும் உணர்வெழுச்சி, அவர் வெளி உலகக் கொடுமைகளைக் கண்டு குமுறி கேள்வி எழுப்புவதால் ஏற்படும் நிஜமான உணர்வெழுச்சியை விடக் குறைவானதாகவே இருக்கிறது. எதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்பது ஒருவரின் தனிப்பட்ட சொந்த விஷயம். இன்றைய யதார்த்த சூழ்நிலையை அப்படியே நான் சித்தரிப்பேன்; அது மட்டும்தான் என் வேலை என்று தேர்ந்தெடுப்பது சற்று சுலபமானது. ஆனால் இன்றைய யதார்த்த சூழ்நிலையை மாற்ற நான் பாடுபடப் போகிறேன் என்று சொல்வது சற்று கடினமானதுதான். இன்னொரு விஷயம். நடிகர்களுக்கும், நடிகைகளுக்கும் இந்தியாவில் உள்ள செல்வாக்கு பெரியது. இந்த நிலையில் அந்தச் செல்வாக்கை உருப்படியாகப் பயன் படுத்தாமல் இருப்பது ஒரு பெருங்குற்றம் என்றே நான் நினைக்கிறேன். இதற்கு ஒரு பெரிய லட்சியப் பிடிப்பு இருக்க வேண்டும் என்பதில்லை. ஏதாவது ஒரு சிறிய பிரச்சினைக்காக உழைக்க ஆரம்பித்தால் போதும். அதனால் ஏற்படும் பலன் உங்களுக்கு ஆர்வமூட்டும். அது ஒரு தொற்றுவியாதி.

□ □ □

# பூமிக்கு வந்த நட்சத்திரம்

www.tamilarangam.net





"இந்தியா ஒரு மதச்சார் பற்ற நாடு; வகுப்புவாதம் கூடாது என்ற அடுக்கு மொழிகளை நாம் திரும்பத் திரும்பச் சொல்கிறோம். மிருகத்தனமாக நடந்து கொள்கிறவர்கள் தப்பிக்க முடியாது என்று நிரூபிக்கப் பட்டால் ஒழிய மக்களுக்குச் சமாதானம் ஏற்படாது."

**நிருபர் :** ஒரு நடிகர் தன்னுடைய பாத்திரங் களைத் தேர்வு செய்து ஏற்றுக்கொண்டால் போதாதா? பதி பரமேஸ்வர் என்ற படத் தில் பிற்போக்குத் தனமான பத்தாம் பசலிப் பாத்திரம் ஒன்றில் நீங்கள் நடித் திருப்பதை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை! இதுபற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**ஷப்னா :** நிச்சயமாகப் போதாது! பாத்திரங் களைத் தேர்ந்தெடுத்து நடிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. நான் முடியாது என்றால் நடிக்க நூறு பேர் இருக் கிறார்கள். யாராவது நடிக்க அந்தப் படம் வெளியாகி விடும். எனவே நான் வேண்டாமென்பது என்னுடைய தனிப் பட்ட வெறுப்பளவில் நின்றுபோய்விடும். அதுவல்ல முக்கியம்! பதி பரமேஸ்வர் மாதிரிப் படம் ஒன்றை யாரும் தயாரிக்க விரும்பாத சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

**நிருபர் :** வகுப்புவாதத்தைக் கண்டித்து டில்லி யிலிருந்து மீரட்வரை பாதயாத்திரையாகச் சென்றார்கள். அதைவிட வகுப்புவாதத் தைப் பற்றி ஒரு சினிமா தயாரிப்பது கூடுதலாக பலனளிக்கும் இல்லையா?

**ஷப்னா :** ஆமாம் என்றும் சொல்லலாம். இல்லை என்றும் சொல்லலாம்! சினிமா ஏராளமான பேர் பார்க்கும் ஒரு சாதனம். முக்கியமான பிரச்சினைகள் பற்றி சினி மாக்கள் தயாரிக்கப்படுவதில்லை. எடுக் கப்படும் சில படங்களும் ஏற்கெனவே விஷயம் தெரிந்த ஒரு பகுதியினருக் காகவே எடுக்கப்படுகின்றன. அனைத் துப்பகுதியினரும் காணும் பொதுச் சினிமா மூலம் மக்கள் மனதில் பாதிப்பை உருவாக்குவது முக்கியமானது. ஆதிக்க வாதிகள், சுயநலவாதிகளை தோலுரித் துக் காட்டாமல் யதார்த்தமான ஒரு படம் எடுப்பது சாத்தியமில்லை. அப்படி எடுக்கும் படத்தை தணிக்கைத் துறை யினர் நிச்சயமாக அனுமதிக்க மாட்டார் கள் இத்தகைய நேரத்தில் லட்சியம் அது தான். ஆனால், யதார்த்தத்தில் அத்த கைய படத்தை எடுக்க உங்களை அனு மதிக்கப் போவதில்லை. பாதயாத்திரை, பேரணிகள் எல்லாம் அடையாளமான ஒரு எதிர்ப்புத்தான்.

**நிருபர் :** வகுப்புவாத உணர்வுகளைத் தணிக்க இந்தப் பாதயாத்திரை பேரணிகளைத் தவிர வேறு என்ன செய்யலாம் என்று நினைக்கிறீர்கள்?

**ஷப்னா :** மக்களின் அடிப்படைத் தேவைகள் முதலில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். டில்லியில் நடந்த கிளர்ச்சிகளுக்கு பின் னணியாக இருந்தது இந்திரா காங்கிரஸ் தான் என்பதை அறியாதவர்களே கிடை யாது. ஆனால், அது தொடர்பாக ஒரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"

நிருபர் : சேரிப்பகுதி மக்களின் தீரம் என்னை பிரமிக்கச் செய்துள்ளது.

ஷப்னா : அத்தகைய தீரத்தை நகரப் பகுதிகளில் வரதட்சணைக் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களிடம் காண முடிவதில்லை. வேறு வழியில்லை, என்ற நிலையிலும் அவர்கள் தங்கள் துயரங்களைத் தாங்கிக் கொள்வது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

"

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மிருகத்தனமாக நடந்து கொண்டவர்களை தண்டிக்கவில்லை என்றால் அது ஒரு பீதி நிரம்பிய சூழ்நிலையை உருவாக்கும். அத்தகைய சூழ்நிலையில் உங்கள் இனத்தோடு சேர நீங்கள் விரும்புவீர்கள்; அது ஒரு வகையான பாதுகாப்பு; இது மற்றவர்களுக்கு எதிராக உங்கள் எண்ணத்தில் முரட்டுத்தனத்தை உருவாக்கும். இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு; வகுப்புவாதம் கூடாது என்ற அடுக்கு மொழிகளை நாம் திரும்பத் திரும்பச் சொல்கிறோம். மிருகத்தனமாக நடந்து கொள்கிறவர்கள் தப்பிக்க முடியாது என்று நிரூபிக்கப்பட்டால் ஒழிய மக்களுக்குச் சமாதானம் ஏற்படாது.

நிருபர் : ராமஜன்மபூமி பாபர் மசூதிப் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை உங்களால் கூற இயலுமா ?

ஷப்னா : இந்தப் பிரச்சினையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் (சி. பி. ஐ.) நிலை நியாயமானதாக உள்ளது. நாடு சுதந்திரம் பெற்ற பொழுது எந்தெந்த வழிபாட்டுத் தலங்கள் எந்த வகுப்பினர் வசம் இருந்ததோ அவர்களிடமே தொடர்ந்து இருக்க வழி செய்யுங்கள். அல்லது உயர் நீதி மன்றத் தீர்ப்பை இரு தரப்பாரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அல்லது தொல் பொருள் இலாகாவிடம் அந்த இடத்தையும், கட்டடங்களையும் ஒப்படைத்து விடுங்கள்.

பாபர் மசூதி உள்ள பைஜாபாத் பகுதி மக்கள் இந்தப் பிரச்சினையில் சம்பந்தப் படவேயில்லை. அங்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மேடை ஒன்றில் நான் பேசினேன்.

ஐந்து லட்சம் கிராமங்களுக்கு சென்று, ஒரு கிராமத்திலிருந்து ஒரு செங்கல் கொண்டு வருவோம். கோவில் கட்ட அனுமதிக்காவிட்டால் அந்தச் செங்கற்களை ரத்தத்தில் மூழ்கடிப்போம் என்று சொல்லியது யார்?

இப்படிப்பேசிய அந்தத் தலைவர்களிடம் ஒன்று கேளுங்கள்! அந்த 5 லட்சம் கிராமத்து ஜனங்களுக்கும் வயிறாரச் சோறுகிடைக்கிறதா? குடி தண்ணீர் உண்டா? சுகாதார வசதி உண்டா? இதுதான் உங்கள் பிரச்சினை. ஆனால் அந்தப் பிரச்சினைகளிலிருந்து அவர்கள் நழுவுகிறார்கள்.

பாபர் மசூதிப் பிரச்சினை என்னைப் பாதிக்கவில்லை. ஆனால் வயிற்றுப்பசி காதை அடைக்கிறது; குடிக்கத் தண்ணீர் இல்லாமல் நா வறண்டு விடுகிறது; நீங்கள், எங்கள் தலைவர்கள் என்றால் இந்த உண்மையான பிரச்சினைகளுக்கு ஏதாவது செய்யுங்கள் என்று கேளுங்கள். இப்படித்தான் நான் அங்கு பேசினேன். அவர்கள் உள்ளங்களில் ஏற்பட்ட விழிப்புணர்வை அவர்கள் முகங்களில் காண முடிந்தது.

நிருபர் : குடிசைப்பகுதி மக்களின் நலத்துக்காகப் பாடுபடும் உங்கள் அமைப்பாகிய 'நிவாரா ஹக்குக்' சில வருஷங்களுக்கு முன்பு, செஞ்சிலுவைச் சங்கம் 15 லட்சம் ரூபாய் நன்கொடை வழங்க முன்வந்த பொழுது அந்தப் பணத்தை ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டப்பட்டது ஏன்?

ஷப்னா : முதலில் ஒரு திருத்தம். செஞ்சிலுவைச் சங்கம் கொடுத்தது ஐந்து லட்சம் தான்; 15 லட்சம் அல்ல.

www.tamilarangam.net



## ஒரு நிமிஷம்!

தோழர்களே,

இந்த இதழின் அட்டையில் ஜனவரி என்று பார்த்தவுடன், டிசம்பர் மாத இதழை வாங்காமல் விட்டுவிட்டோமா என்று நினைக்க வேண்டாம். டிசம்பர், ஜனவரி ஆகிய இரண்டு மாதங்களின் இணைந்த இதழாக, இந்த இதழை வெளியிடுகிறோம். சிறுபத்திரிகைகளை வழக்கமாகத் தொற்றிக் கொள்ளும் இயல்பு, இரண்டாவது இதழிலேயே பீடித்துக்கொண்டதா என்று எண்ண வேண்டாம். தேர்தலின் காரணமாக முதல் இதழைத்தாமதமாக வெளியிட்டதால், இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இரண்டாவது இதழை டிசம்பர் மாதத்துக்குள் அளித்து விட்டு, பின்னர் ஜனவரி 15ஆம் தேதிக்குள்ளாகவது அடுத்த இதழை வெளியிட்டாக வேண்டும். நடைமுறையில் அது சாத்தியப்படாது என்று தெரிந்ததால் இரு மாதங்களுக்கும் சேர்த்து இந்த இதழை வெளியிடுகிறோம். இனி, ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் உங்களை 'புதிய இளைஞன்' சந்திப்பான். சந்தாதாரர்களுக்கு எந்தவிதத் தடங்கலுமின்றி 12 இதழ்களும் அனுப்பப்படும். நிர்வாக வசதிக்காக, இரண்டு மாதங்களுக்குச் சேர்த்து இந்த இதழை வெளியிடுவதற்கு, தோழர்களிடமிருந்து ஆட்சேபம் இருக்காது என்று நம்புகிறோம். சிறு பத்திரிகைகளின் சிரமங்களைத்தான் தாங்கள் நன்கறிவீர்களே!

— ஆசிரியர் குழு.

---

என்னனப் பொருத்தவரை பணத்தோடு நிபந்தனைகள் இல்லாதவரை அந்தப் பணத்தை வாங்கிக் கொள்வதில் தவறில்லை; சேரிகளில் வசிக்கும் மக்களுக்கு கொடுக்கப்படும் பணத்தை சொகுசான வீடுகளில் வசிக்கும் நாம் யார் வேண்டாமென்று சொல்ல? சில அமைப்புகள் உங்கள் நலனுக்காகத் தருகிறேன் என்று சொன்னார்கள். கொள்கை அடிப்படையில் அதை வேண்டாமென்று சொல்லி விட்டோம் என்று அந்த சேரி மக்களிடம் எப்படிச் சொல்வது? நாங்கள் செய்தது நியாயமானது என்று அவர்களை ஒத்துக் கொள்ளச் செய்வது எப்படி? அத்தோடு, இன்னொன்றையும் கட்டாயம் சொல்ல வேண்டும். பணம் வாங்குவதில் கூட யார் கொடுக்கிறார்கள் என்று பார்த்தாக வேண்டும். ஏனெனில் முதலில் பணத்தைக் கொடுத்து விட்டு சிலர் உங்களைக் கட்டுப்படுத்த முயற்சிக்கலாம் என்பதையும் தெளிவு படுத்திவிட வேண்டும்.

**நிருபர் :** *சீனாவில், சமீபத்தில் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

**ஷப்னா :** இடதுசாரிகள் விஷயத்தில் நான் ஏமாற்றமடைந்த சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று!

**நிருபர் :** *சேரிப்பகுதி மக்களின் தீரம் என்னை பிரமிக்கச் செய்துள்ளது!*

**ஷப்னா :** அத்தகைய தீரத்தை நகரப் பகுதிகளில் வரதட்சணைக் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களிடம் காண முடிவதில்லை. வேறு வழியில்லை, என்ற நிலையிலும் அவர்கள் தங்கள் துயரங்களைத் தாங்கிக் கொள்வது எனக்கு ஆச்சரியத்தை தருகிறது.

**நிருபர் :** *வன்முறை பற்றி உங்கள் கருத்தென்ன?*

**ஷப்னா :** வன்முறையை எந்த வடிவிலும் நான் எதிர்க்கிறேன்.

**நிருபர் :** *மக்களுக்கு வேறு வழியே இல்லை என்ற நிலையில் கூடவா?*

**ஷப்னா :** ஆம்!

**நிருபர் :** *மாணவர்களை ஈர்க்க உங்கள் குழு முயற்சிக்கிறதா?*

**ஷப்னா :** நிச்சயமாக முயற்சிக்க வேண்டும். ஆனால் இதுவரை இந்தவழியில் ஓரிரு தடவைக்கு மேல் முயற்சிக்கவில்லை. இளைய தலை முறையிடமிருந்துதான் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படுகின்றன.

தமிழில் : அருண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பொய்... பொய்... முழுப் பொய்... 'புலனாய்வு'ப் பத்திரிகைகள்

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றாக பத்திரிகைத் துறை கருதப்படுகிறது. மற்ற மூன்று தூண்களிலும் எந்தளவுக்கு சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறதோ, அதன் பரிமாணத்துக்கு எந்த வகையிலும் குறையாத அளவில், பத்திரிகைத் துறையிலும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதை மறுக்கமுடியாது. தமிழகத்து பத்திரிகைத் துறையைப் பொறுத்தவரை ஜனரஞ்சகப் பத்திரிகைகள் என்ற பெயரில் மேட்டுக் குடியினருக்காக, மேட்டுக் குடியினரால் பத்திரிகைகள் வந்து கொண்டிருந்தன. முக்கியமாக, ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் கைக்குள் பத்திரிகையுலகம் முடங்கிக் கிடந்தது. இவர்களால் சாமானிய மக்களின் எந்தவொரு பிரச்சினையும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. உண்மையான சமூக அவலங்களை கண்டு கொள்ளாமல் கதைகள், கட்டுரைகள், படங்கள் மூலமாக மக்களை சந்தோஷப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுதங்கள் வாசகர்களை கருத்துக் குருடர்களாக்கிக் கொண்டிருந்தனர். விமர்சனத்துக்குரிய எந்த விசயத்திலும் பட்டுக் கொள்ளாமல் வியாபாரத்தின், விளம்பரங்களின் கணிசமான உயர்வே இவர்களின் பிரதானக்கண்ணோட்டமாக இருந்தது. அரசுக்கும், போலீசுக்கும், செல்வாக்குமிக்கவர்களுக்கும் சேவகம் செய்யும் அமைப்புகளாகச் செயல்பட்டு வந்த பத்திரிகை துறையில் சாமானியனுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் வெளியிடப் படமாட்டாது.

இப்படியிருந்த தமிழகப் பத்திரிகைத்துறையில் எண்பதுகளின் காலக்கட்டத்தில் ஒரு புதிய அலை வீசத் தொடங்கியது. சுரண்டும் ஆதிக்க சக்திகளின் மீதும், சமூக அவலங்களின் மீதும், அரசின் மீதும் கோபம் கொண்ட இளைஞர் பட்டாளம் தன்னைச் சுற்றி நடக்கும் கொடுமைகளை சகித்துக்கொள்ள முடியாமல் தவித்தது. வேலை வாய்ப்பகங்களில் நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் இழந்த இந்த இளம் ரத்தங்கள் மாறுதல்களுக்கான உத்வேகத்துடன் சினிமா உள்ளிட்ட கலை, இலக்கியத் துறைகளுக்குள் பிரவேசித்தது போல பத்திரிகைத் துறைக்குள்ளும் நுழைந்தது.

### நல்ல துவக்கம்

அதுவரை கையில் சாப்பாட்டு மூட்டையும், பையில் வெற்றிலை பொட்டலமுமாக வந்த மிதவாதப் பேர்வழிகளுடன் இந்த இளைஞர்களும் ஊடுருவினர். இவர்களிடம் எழுதவேண்டும் என்ற வேகம் இருந்ததே தவிர எழுத்தின் இலக்கணம் பற்றி அறியவில்லை. ஆனால், இவர்களின் எழுத்துக்களை சுமந்த பக்கங்கள்தான் மக்களால் பேசப்பட்டது. இந்த இளைஞர்கள், ஆசிரியர் குழு நான்கு சுவருக்குள் இருந்து செயல்படுவது என்பதை மாற்றி நேரடியாக மக்களிடம் சென்றார்கள். கற்பனையில் மிதந்து கொண்டிருந்தவர்களை நிதர்சனத்துக்கு அழைத்து வந்தார்கள். பாதிக்கப்படுகிறவர்களை தேடிப் போனார்கள். அவர்கள் பாமரர்களாக, பராரிகளாக இருந்தாலும் அவர்களுக்காக அரசாங்கத்தையும், ஆதிக்க சக்திகளையும் நெஞ்சு நிமிர்த்தி எதிர்த்தனர். தங்களால் எதிர்க்க முடியாத விஷயங்களை பத்திரிகைகளின் பக்கங்களில் அவர்கள் சாட்டை



www.tamilarangam.net



"வேலை வாய்ப்பகங்களில் நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் இழந்த இந்த இளம் ரத்தங்கள் மாறுதல்களுக்கான உத்வேகத்துடன் சினிமா உள்ளிட்ட கலை, இலக்கியத் துறைகளுக்குள் பிரவேசித்தது போல பத்திரிகைத் துறைக்குள்ளும் நுழைந்தது."

யடிக்கு ஆளாக்கி இருப்பதைப் பார்த்து மக்கள் சந்தோஷப் பட்டனர். அரசியல்புள்ளிகளும் அதிகார வர்க்கங்களும் பயப் படத்துவங்கின.

படித்தவர்களுக்கு மட்டுமே உரிய சாதனமாக இருந்த பத்திரிகைகளை பாமரனும் வாங்கும் அளவுக்கு செய்த பெருமை, இளைஞர்கள் ஊடுருவிய புலனாய்வுப் பத்திரி கைகள் என்றழைக்கப்படும் இந்த இதழ்களுக்கு உண்டு. மக்களுக்குப் புரிந்த மொழியில், எளிமையாக விஷயங்கள் விளக்கப்பட்டன. இவைகளுக்கு பொதுமக்களி டம் இருந்த வரவேற்பு ஆளும் வர்க்கத்தை கலக்கியது. இப் படியிருந்த புலனாய்வுப் பத்திரி கைகளின் துவக்கம் இன்றைய நிலையில் எதை நோக்கி போய்க் கொண்டிருக்கிறது என்று பார்க்கும் போது வேதனையைத் தவிர வேறெது வும் மிஞ்சவில்லை.

**'பரபரப்பான' வியாபாரம்**

தமிழில் 'ஜுனியர் விகடன்' தான் முதன் முதலில் புலனாய்வுச் செய்தியில் இறங் கியது. இதற்கு முன்பாக துக்ளக்கில் வெளிவந்த மஸ்டர் ரோல் விவகாரம் மக்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்ற தையும், அதையடுத்து துக்ளக் கிற்கு நடந்த வியாபாரத்தை யும் மனதிற் கொண்டு துவக்கப் பட்டது. எந்தவொரு விஷயத் திலும் உலகத்தின் பார்வைக்கு அதன் ஒரு புறமே தெரிவிக்கப் படும். ஆனால் அதன் மறு புறத்தை துப்பறிந்து வெளி யிடும் வேலையில் ஜு.வி. இறங் கியது. ஆனால் நாளடைவில் பரபரப்பான விஷயங்களைத்தர வேண்டும் என நினைத்து கண்டதையும், கேட்டதையும் செய்திகளாக்கினர். பரபரப் பான விஷயங்களை தேடிப் போகாமல் கிடைக்கும் விஷயங் களில் பரபரப்பு உண்டாக்கும் வகையில் இறங்கினர்.

**ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கும் வித்தகர்கள்!**

செய்திகளை புலனாய்ந்து, ஆதாரங்களுடன் வெளியிடு வதற்கு போதிய அவகாசமும், வசதிகளும், திறமையான நபர்களும் இல்லாததால் பக்கங்களை நிரப்ப சாதாரண செய்திகளையும் புலனாய்வுப் பாணியில் எழுதினாலே அதற்கு அந்த அந்தஸ்து கிடைக்கும் எனக் கருதினர். உண்மையில் அவை ரிப்போர் ட்டிங் ஜெர்னலிசம் தான். (Reporting Journalism) இன் றைக்கு தமிழில் எல்லாப் பத்திரி கைகளும் செய்து வருவது இதைத்தான். அதுவும் இம் மாதிரியான புலனாய்வுப் பத்திரிகைகள் என்று சொல்லக் கூடியவை அரசியலை தாண்டிப் போவதில்லை. உள் கட்சி விவகாரங்களை எழுது வதும், ஆளுங்கட்சியிலுள்ள ஊழல் சண்டைகளை புறம் கூறுவோர் மூலம் பெற்று எழுதுவதும், கிசுகிசுக்களை பிரசுரிப்பதும் புலனாய்வுச் செய் திகள் என்று இவர்கள் கொண் டிருக்கிறார்கள். அவைகள் எந்தளவுக்கு உண்மை என்பது பற்றி கூட இவர்களில் எவரும் அக்கறை கொள்வது கிடை யாது. அடுத்தவாரம் இது நடக்கும். இந்த வாரம் இது மாறும் என்று ஹேஸ்யம் கூறு வதும் புலனாய்வுப் பத்திரிகை களின் இலக்கணமாகக் கருது கிறார்கள்.

ஆனால், தாங்கள் சொன்ன வற்றில் எததனை நடந்தது? என்ன நடந்தது என்பது பற்றி பத்திரிகைகள் கவலைப்படுவது கிடையாது. வாசகர்களும் அப்படியே! இம்மாதிரியான பத்திரிகைகளுக்கு நிலையான வாசகர்கள் இருப்பதில்லை. அந்தந்த வாரத்தில் அட்டை யில் பரப்பரப்பான விஷயம் இருந்தால் அதைக் கவனித்து அதன் பிறகே வாங்குகிறார் கள். இதனால் சர்க்குலேஷன் ஏற்றமும் இறக்கமுமாக ஆகிறது. அதை ஏறுமுகமாக்க வாராவாரம் எதையாவது பர பரப்பான தலைப்பாக வைக் கிறார்கள். ஆனால், அதில் சொல்லப்பட்டிருக்கும் எந்த விஷயமும் நடைமுறையில் இருக்காது. அதிலும் இது போன்ற பத்திரிகைகளில் ஒரே ஒரு நபர்தான் அத்தனை பக்கங்களிலும் வெவ்வேறு புனைப் பெயர்களில் எழுது கின்றனர். எனவே, போது மான அவகாசம் இல்லாததால் மனதில் படுபவைகளையும், காதில் விழுபவைகளையும் செய்திகளாக்குகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"

செய்திகளை புலனாய்ந்து, ஆதாரங்களுடன் வெளியிடுவதற்கு போதிய அவகாசமும், வசதிகளும், திறமையான நபர்களும் இல்லாததால் பக்கங்களை நிரப்ப சாதாரண செய்திகளையும் புலனாய்வுப் பாணியில் எழுதினால் அதற்கு அந்த அந்தஸ்து கிடைக்கும் எனக் கருதினர். உண்மையில் அவை ரிப்போர்ட்டிங் ஜெர்னலிசம்தான்;

"

## முதலில் பெயர்; அப்புறம்தான் குழந்தை!

இதில் வேடிக்கை என்னவென்றால் பத்திரிகையின் அட்டையில் ஒரு கவர்ச்சிகரமான தலைப்பை வைத்து அட்டைகள் அச்சாகி விட்டிருக்கும். ஆனால், அதற்கும் பின்னர்தான் அந்தத் தலைப்புக்கு தொடர்பாக விஷயங்களைத் தேடுபவர்களும் இருக்கிறார்கள். ஒரு ஊரிலோ, மாவட்டத்திலோ சர்க்குலேஷன் குறைந்தால், உடனே தன் நிருபர்களை அந்த ஊர்களில் இருந்து ஏதாவது பரபரப்பான செய்திகளைக் கொண்டு வரச்செய்து அதை வெளியிட்டு, அங்கு வியாபார உயர்வுக்கு வழிவகுக்கின்றனர். இலாபம் தான் முக்கிய நோக்கம்.

சினிமா நடிகர்களுக்கு அரசியலில் முக்கியத்துவம் தரப்படுவதை தங்கள் பத்திரிகையில் எதிர்ப்பர். ஆபாசப் படங்களை சாடுவர். அதே சமயம் அதே பதிப்பகத்தின் துணைப்புத்தகமாக சினிமா நடிகர்களுக்கு துதிபாடி நடிகர்கள் பெயரிலேயே பத்திரிகையை அதே ஆசிரியரே நடத்துவார். இப்படிப்பட்ட வேடதாரிகள் கையில்தான் 'புலனாய்வு' பத்திரிகைகள் சிக்கியுள்ளன.

ஒரு தற்கொலையோ, கொலையோ, அல்லது அரசியல் ரீதியாக முக்கியமான சம்பவமோ நடந்திருந்தால், அடுத்த வாரத்தில் இந்தப் புலனாய்வுப் பத்திரிகைகள் அனைத்தும் அந்தப் பிரச்சினைகளைப் பற்றியும், அதற்கு காரணமானவர்களைப் பற்றியும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகச் செய்தி வெளியிட்டிருக்கும். ஆனால், உண்மைச் சம்பவம் அந்த நான்கையும் தாண்டி ஐந்தாவதாக வேறொரு விஷயமாக இருக்கும். இப்படிப் பல சம்பவங்கள் ஏற்கனவே நடந்திருக்கின்றன.

பத்திரிகைகள் மீது பொது மக்களுக்கு இருந்த நம்பிக்கையையும், மதிப்பையும் சீர்குலையச் செய்ததில் இந்த புலனாய்வுப் பத்திரிகைகளுக்கு பெரும் பங்கிருக்கிறது. ஊழலைப் பற்றி எழுதினால் இவர்கள் இலட்சக்கணக்கிலே எழுதுவது கிடையாது. எல்லாமும் கோடிக்கணக்கில்தான். கோடிகளை சரளமாக புழக்கத்தில் விடமுடியுமா என்ற பொருளாதார அறிவுகூட இருப்பதில்லை. பத்திரிகைகள் மீது மதிப்பை வளர்க்க வேண்டியதற்குப் பதிலாக பயத்தை உருவாக்கி வைத்திருப்பதுதான் இவர்களின் சாதனை.

### ஜீவராசிகளின் ஆதிக்கம்

பத்திரிகைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சுதந்திரம் புனிதமானது. அதை ஆட்சியாளர்கள் எந்தளவுச்கு முடக்கலாம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அவர்களின் செய்கைக்கு பொதுமக்களின் ஆதரவை திரட்டித் தரும் வகையில் இந்தப் புலனாய்வுப் பத்திரிகைகள் என்று சொல்லக்கூடியவைகளின் நடத்தைகள் இருந்து வருகின்றன. இது போன்ற பத்திரிகைகளில், இப்போது மனிதர்கள் எழுதுவது கிடையாது. கழுகு, ஆந்தை, என ஜீவராசிகள்தான் எழுதுகின்றன. அதோடு வாசகனின் கோபத்தைத் தூண்டவேண்டும் என்பதற்காக "மயிரைக்கூட புடுங்க முடியாது," 'செருப்பால் அடியுங்கோ' என நீதிபதிகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் எதிரானவாசகங்கள். இன்று அந்த நிலையும் தாண்டிப்போய், சர்க்குலேஷன் குறைந்ததும் இதை விட இன்னும் விறுவிறுப்பாக்குவது எப்படி என குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். அதாவது அதன் விளிம்பிற்கே சென்று விட்டு அடுத்து கால் வைக்க இடமில்லாமல் புலனாய்வுப் பத்திரிகைகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. இதே நிலை இனியும் நீடிக்காது என்பதால், இப்போது அடுத்த வடிவம் பற்றி எதுவும் புரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். எப்படியும் இந்த நிலை இன்னும் சில மாதங்களுக்குக்கூட தாங்காது.

ஏற்கனவே, ஜூனியர் விகடன் தன் நிலையிலிருந்து விடுபட்டு இப்போது பழையபடி ஜனரஞ்சக நிலைக்கு வந்துவிட்டது. அதிர்ச்சி ரிப்போர்ட், பரபரப்பு

www.tamilarangam.net



பேட்டி, 'ஷாக்' விசிட் என்று அட்டையில் போட்டும், எதுவும் எடுபடவில்லை. தமிழக அரசியலை, அரசியல் பற்றிய சிந்தனைகளை மழுங்கச் செய்ததில் இவர்களின் பணி அலாதியானது. அரசியல்வாதிகளின் சச்சரவுகள், குரோதங்கள், காழ்ப்புணர்ச்சிகள்தான் அரசியல் என்ற தவறான கருத்தை மக்களிடம் விதைக்கின்றன. மஞ்சள் பத்திரிகைகளுக்கும் இவைகளுக்கும் நூலிழைதான் வித்தியாசம் என்று முடிவு செய்யுமளவுக்கு பல கட்டுரைகள் இவைகளில் இடம் பெறுகின்றன.

இவைகளில் பிரதான செய்தியாளர்களாக இருப்பவர்களுக்கு அரசியல் குறித்த எந்தத்தெளிவும் இருக்காது. அதைப் பெறுவதற்குண்டான முயற்சிகளும் இருக்காது. இதனால் அரசியல் சட்டத்திற்கும், நாடாளுமன்ற முறைகளுக்கும் முரண்பட்ட பல விஷயங்கள் இவைகளில் அடிக்கடி இடம்பெறுவதும் உண்டு. ஒரு புலனாய்வுப் பத்திரிகை தி.மு.க. எதிர்ப்பு நிலை மேற்கொண்டால், இன்னொன்று ஆதரவு நிலையை மேற்கொள்ளும். அதாவது வியாபாரத்தை தவிர இவர்களுக்கு வேறு எந்த நோக்கமும் கிடையாது. நடிகைகள், அரசியல் புள்ளிகள் பெயரில் இவர்களே எழுதிக் கொண்டுஅந்தப் பிரபலங்களின் பெயர்களை மட்டும் பயன்படுத்திக் கொள்கின்றனர். இது ஜனரஞ்சக பத்திரிகைகளின் ஃபார்முலா.

## நூதனத்திருட்டு!

இன்னொரு சுவையான விஷயம். ஒரு புலனாய்வுப் பத்திரிகை அச்சாகும்இடத்தில் தான், இன்னொரு புலனாய்வு பத்திரிகையும் அச்சாகிறது. வெளிவரும் நாளில்தான் வித்தியாசம். அதனால், போட்டியில் முதலில் அச்சாகும் பத்திரிகையின் பிரதிகளை ரகசியமாக எடுத்து அதைப்படித்து, அதே தலைப்பில் வேறு மாதிரியாக செய்திகளை எழுதி இன்னொரு பத்திரிகை வெளியிட்டுவந்தது. இதைத்தடுக்க, முதல் பத்திரிகை தனது பிரதிகள் அனைத்தும் எடுத்துச் செல்லப்படும் வரை அச்சகத்திலேயே இருவரை காவல் போட்டு வைக்கிறது. இந்தப் புலனாய்வு பத்திரிகைகள் பற்றி புலனாய்வு செய்தாலே விநோதமாக இருக்கும். தங்கள் பத்திரிகையின் பிரதி யாரால் திருடப்படுகிறது என்பதையே அந்தப்புலனாய்வு பத்திரிகையால் இன்றளவும் கண்டு பிடிக்க முடியவில்லையாம். இது எப்படி இருக்கிறது?

## ஊருக்கு உபதேசம்

தங்கள் பத்திரிகைக்கான சுதந்திரம் பற்றி பலமாகக் குரல் கொடுக்கும் இவர்கள், சாதாரண பிரஜையின் சுதந்திரத்தை அனுமதிப்பதில்லை. யாரைப்பற்றி வேண்டுமானாலும், எந்த ஆதாரமும் இல்லாமல் விஷயங்களை அச்சில் ஏற்றுவார்கள். அதற்கு, பாதிப்புக்குள்ளான சம்மந்தப்பட்ட நபர் விளக்கமோ, மறுப்போ எழுதினால் அது பிரசுரிக்கப்படமாட்டாது. சில புலனாய்வுப் பத்திரிகைகள் நாங்கள் மறுப்பெல்லாம் வெளியிடுவதில்லை என தெளிவுபடக் கூறுகின்றன. தங்களின் முடிவே இறுதியானது என்பது இவர்களின் ஏதேச்சாதிகாரப் போக்கு!

அப்படியே சிலர் கோர்ட்டுக்கு சென்றாலும் இவர்கள் நீதிமன்றங்களை மதிப்பதில்லை. கோர்ட் அவமதிப்பு நடவடிக்கைகளில் துணிந்து இறங்குகிறார்கள். கோர்ட் நடவடிக்கை எடுத்தால் அதை விளம்பரமாக்கிக் கொள்ள ஏங்குகிறார்கள். பத்திரிகை மீது போடப்படும் எந்த வழக்கையும் சென்னையிலுள்ள கோர்ட்டிலேயே தொடர வேண்டும் என பத்திரிகையில் தெரிவிக்கின்றனர். சட்டத்தில் அப்படி விதியில்லை. பாதிக்கப்பட்டவர் தன் பகுதியிலேயே வழக்கு தொடரலாம். தனக்குப் பாதகம் என்பதால் வாசகனுக்குக் கூட தவறான தகவல் தருகின்றன இந்தப் புலனாய்வுப் பத்திரிகைகள்.

அரசு ஊழியர்கள் ஊதிய உயர்வுக்காகவும், மற்ற ஊழியர்களின் நலனுக்காகவும் ஆத்திரப்படும் இப் பத்திரிகை முதலாளிகள், தங்கள் ஊழியர்களை நடத்தும் விதம் அதை விட மோசமாக இருக்கும். எழுதுபவனுக்கு பெயர் அங்கீகாரம் கூடத் தருவதில்லை. அலுவலகத்தில் எவரின் பெயரும் பட்டியலில் இருக்காது. அரசியல் புள்ளிகள், சினிமா நடிகர்கள் செய்யும் அனைத்து பொருளாதார குற்றங்களையும் இந்தப் பத்திரிகை அதிபர்களும் செய்கின்றனர். அதிகாரிகளைப் போல அதன் பத்திரிகையாளர்கள் ஆணவத்தோடு செயல்படுகிறார்கள். நாட்டின் மற்ற துறைகள் ஒன்றையொன்று கட்டுப்படுத்துவதாக உள்ளன. அவைகளை கண்டித்து வழிநடத்த வேண்டிய பத்திரிகைத்துறையை எவரும் விமர்சிப்பதில்லை.

தற்போது, இப்படிப்பட்ட பத்திரிகைகள் வீழ்ச்சி நிலையில் இருக்கின்றன. அது சந்தோஷப் படக் கூடிய விஷயம். ஆனால், அது புலனாய்வுப் பத்திரிகைகளின் தரத்தை மேம்படுத்தவந்துள்ள எச்சரிக்கை. இந்தப் புளிப்பு தட்டிய தன்மை மக்களிடம் தொடர்ந்தால், அவை அழிவைத்தான் சந்திக்கும். மீண்டும் ஜனரஞ்சகப் பத்திரிகைகளின் கை ஓங்கும். அது இதனினும் ஆபத்து. புலனாய்வுப் பத்திரிகையாளர்கள் சிந்திக்க வேண்டிய கட்டத்திற்கு தள்ளப்பட்டு பல நாளாகிறது. சிந்திக்கத் தொடங்குவார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்!

—சங்கர்லால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எங்கள் பக்கம்...

## அரைவேக்காடு, அவசர கோலம்

இதழ் மிகச்சிறப்பாயிருந்தது. ஓவியங்களுக்கும், புகைப்படங்களுக்கும் இதேபோல் தொடர்ந்து இடமளிக்கவேண்டும். புரட்சி வாழ்த்துக்கள்! — டி. ஆர். டி. மாரிமுத்து, பட்டுக்கோட்டை.

□

இளைஞர்களிடையே எழுச்சியைத்தூண்டும் 'புதிய இளைஞனை' வரவேற்கிறேன். —எஸ். டி. கனிராஜ், சத்தியமூர்த்தி நகர் சென்னை-39.

□

'புதிய இளைஞன்' முதல் இதழ் 'லேஅவுட்' சூப்பர். கார்ட்டூன், புகைப்படங்கள், கோபக்கார ஓவியரின் பார்வை அசத்தல். நவ இளைஞனின் கவிதை இளைஞர்களுக்கும், இளம் கவிஞர்களுக்கும் வழிகாட்டும் கவிதை. அவர்களை நிச்சயம் உசுப்பி விடும். நன்மாரி, அருண், அருண்மொழி, பாரதி ஆகியோரின் கட்டுரைகள் - சிந்திக்கத் தூண்டுபவை; நம்பிக்கைத்தரும் முயற்சி. —பேராசிரியர் இரா. இரகுபதி, மாவட்டச் செயலர், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், திருச்சி.

□

அந்த நடுப்பக்கக் கவிதை... 'புதிய இளைஞனின்' போர் முரசாக பரணி பாடியிருக்கிறது; உச்சந் தலையில் சம்மட்டி கொண்டு அடித்தாற்போன்ற இரு கருத்துப் படங்கள்... தொடருங்கள். தேர்தலுக்கான அரசியல் கட்டுரைகளிலிருந்த சூடு, ஸ்ரீகாந்த் பற்றிய கட்டுரையிலும் இருந்தது. வடிவமைப்பை இன்னும் வளப்படுத்துங்கள்; இது ஒரு நல்ல தொடக்கம். —எஸ்.எம்.பி. வீரமணி, திருச்சி-8.

□

'புதிய இளைஞன்' அட்டைப்படங்கள் தூள் உள்ளடக்கத்தில் சில மாற்றங்கள் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும்; 'புதிய இளைஞனை' செம்மலர் தூவி வரவேற்கிறோம். —எஸ். அன்வர் ஷாஜி, மாவட்டச் செயலர், AIYF, கூடலூர், நீலகிரி.

□

'புதிய இளைஞன்' புதிய எழுச்சியுடன் புறப்பட்டிருக்கிறான். உள்ளடக்கம், செய்நேர்த்தி எல்லாம் நிறைவாக இருக்கின்றன. வாழ்த்துக்கள். பாராட்டுக்கள். பாரதி எழுதியுள்ள 'அண்ணன் ஆடிய ஆட்டத்துக்கு ஒண்ணே முக்கால் கிரவுண்டு இனாம்' என்ற கட்டுரை இன்னும் கூர்மையாக இருந்திருக்க வேண்டும். —இராகுலதாசன், தமிழ்த்துறை, ஸ்ரீசேவுகன் - அண்ணாமலைக் கல்லூரி, தேவக்கோட்டை.

□

'புதிய இளைஞன்' படித்தேன். அத்தனை படைப்புகளும் அருமையாக இருந்தன. 'அண்ணன் ஆடிய ஆட்டம்: ஸ்ரீகாந்தைப் பற்றிய விமர்சனம் சரியானதுதான் என்றாலும் அவசரகோலத்தில் அரைவேக்காட்டுத்தனமாக பாரதி கிரிக்கெட் விளையாட்டையே கொச்சைப் படுத்தியுள்ளார். வீ. தர்மதாஸ், மன்னார்குடி.

## பாரதியின் பதில்

தோழர்களுக்கு, பாரதியின் கட்டுரை ஸ்ரீகாந்த் என்ற விளையாட்டு வீரரின் கொஞ்சங்கூட சமூகப் பொறுப்பற்ற செயலை விமர்சிக்கும் கண்ணோட்டத்தில்தான் எழுதப்பட்டது. 'வழங்கியவர்களை விட்டுவிடுங்கள்' என்று மிக எளிமையாக எழுதி விட்டாரே என்று இராகுலதாசன் ஆதங்கப்பட்டிருக்கிறார். வழங்கியவர்களைப் பற்றிய விமர்சனம் தேவை என்பதில் எந்தக்கருத்து மாறுபாடும் இருக்க முடியாது. ஆனால், இந்தக் கட்டுரையில் அதையும் சேர்த்து ஆராய வேண்டாம் என்ற நோக்கில்தான், அவ்வாறு எழுதப்பட்டது. பூர்ஷ்வாக்கட்சிகளின் அரசுகள் எதையும் ஆதாயமாக்கப்பார்க்கும் என்பது இயற்கையே. ஆனால் இளைஞர்களின் 'மோக நாயகனாகத்' திகழும் ஸ்ரீகாந்த் என்ற வீரரின், சமூகத்தை அலட்சிமாகக் கருதும் தனிமனித குணாம்சத்தை அம்பலப்படுத்துவதே பாரதியின் பிரதான நோக்கம். மற்றபடி, ஸ்ரீகாந்தின் விளையாட்டு பற்றியோ அல்லது கிரிக்கெட் பற்றியோ குறைத்து மதிப்பிடும் கட்டுரை அல்ல அது. மன்னார்குடி தர்மதாஸ், தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். ஒரு விளையாட்டின்

www.tamilarangam.net




# ENLIGHTEN YOUR KNOWLEDGE

through the books from USSR supplied through
V/O. MEZHDUNARODNAYA KNIGA

BOOKS ON

Marxism - Leninism
Perestroika & Glasnost
Current Political Issues
History, Law, Philosophy
Literature

Science
Engineering
Technology
Popular Science &
Children's Books.

Aailable with

USSR BOOK CENTRE
553, Mount Road, Teynampet
Madras & 600 018.
&
NEW CENTURY & BOOK HOUSE P LTD ;
138, Mount Road, Madras 600 002.

Branches at Madurai, Coimbatore, Trichy, Pondicherry, Tirunelveli, Salem
Depots at Chidambaram, Ooty, Karaikudi, Dindigul, Tanjore Tirunelveli.


மீதுள்ள ரசனையை அதை விளையாடும் ஒரு வீரரின் மீதான விமர்சனத்துடன் தொடர்புப் படுத்தி பார்ப்பது எந்தவகையில் சேர்த்தி? தர்மதாஸ், உங்களைத்தான் கேட்கிறேன்! —பாரதி.

என் மாதிரி வளரும் இளைஞர்களுக்கு இது ஒரு புரட்சிப்படைப்பாகும்; கிரிக்கெட் வீரர்களுக்கு எவ்வளவு வருமானம் என்று தெரியாமலிருந்த என்ன மாதிரி இளைஞர் களுக்கு விருந்து பாரதியின் கட்டுரை. சிறு கதைகள் பிரசுரமானால் மிகவும் நன்றாக இருக்கும். — பி. மாரியப்பன், அம்பத்தூர், சென்னை-53.

விலைவாசி உயர்வைப்பற்றிய ஆய்வுக் கட்டுரை மிகவும் நன்றாக இருந்தது. நன் மாரியின் போஃபர்ரிஸ் பிரச்சினை பற்றிய விளக்கக்கட்டுரையும் வரவேற்கத்தகுந்தது. நமது ஜனநாயக நாட்டின் மோசமான நிலையை சுட்டுக்காட்டியுள்ளீர்கள். — எஸ். சீனிவாசன், அம்பத்தூர், சென்னை-53.

போஃபர்ஸ் ஊழல்பற்றிய உண்மைச் செய்தி அருமையாக இருந்தது. அட்டைப் படமும் அருமை. வாழ்த்துக்கள்—ஜி. சண்முகம், தருமபுர ஆதினகலைக் கல்லூரி, மயிலாடு துறை.

எண்பது கோடி மக்கள் நிரம்பிய இந்தியா வில் ஒரு 'புதிய இளைஞன்'; நம்முடைய உரிமையைக்கேட்க புறப்பட்டு விட்டான். —மாணவன் கு. வெற்றிவேல், அரசினர் ஆதி திராவிடர்மேல் நிலைப்பள்ளி, கன்னிகாபுரம், சென்னை-12.

புதிய இளைஞனைப் பொருத்தவரை வடிவமைப்பில் இதைவிடச்சிறப்பாக செய்ய முடியாது என்று எல்லாத் தோழர்களும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளது. அதிக அளவில் படங்கள். ஓவியங்களை இடம் பெறச் செய்யுங்கள். உங்கள் மகத்தான பணிக்கு எனது மனப்பூர்வ பாராட்டுகள். —வி. சங்கரகிருஷ்ணன், மாவட்டச் செயலர், AIYF, சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடி.

---

இளைஞர் பெருமன்ற சென்னை பெருநகர பொருளாளர் தோழர். அரிஹரன், செல்வி அல்லி ஆகியோரின் திருமணம் சென்னையில் நடைபெற்றது.

மணமக்கள் புதிய இளைஞன் வளர்ச்சிக்காக ரூபாய் 100 — நன்கொடை வழங்கினார் கள். வாழ்க மணமக்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 'குழந்தையும் தெய்வமும்'

## ஒன்று என்கிறோம்

## ஆனால், தினமும் 40ஆயிரம் மழலைகள் மடிவதை அறிவோமா?

ஒரு நாளைக்குத்தான் எத்தனை தெய்வங்கள் மடிகின்றன! அதிர்ச்சியடையாதீர்கள்! ''குழந்தையும், தெய்வமும் ஒன்று'' என்றால், உலகம் முழுவதும், அனுதினமும் 40,000 குழந்தைகள் மடிகின்றன!

''குழந்தைகள் நமது பெரும் செல்வங்கள்,'' ''இந்நாள் மழலைகள் நாளைய தலைவர்கள்'' போன்ற வாய்கிழியும் வசனங்கள் வீதியெங்கும் கேட்கின்றன. ஆனால், உண்மையில், ஆயிரக்கணக்கான குழந்தைகள் நாள்தோறும் கடும் துன்புறுத்தலுக்கு இலக்காகின்றன. உரிய கவனிப்பின்றி செத்து மடிகின்றன.

ஆண்டி முதல் அரசன் வரை குழந்தைகளைச் சுரண்டிப்பிழைப்பது அன்றிலிருந்து இன்றுவரை நீடிக்கும்யதார்த்தம். பிச்சைக்காரன், குழந்தைகளைத் திருடி அல்லது தத்தெடுத்து தனது 'தொழிலை' விரிவான அளவில் 'பிராஞ்சு ஆபீஸ்' போட்டு நடத்துகிறான். சமீபத்தில், சென்னைப்புற நகர் பகுதியில் இது போன்ற ஒரு கும்பல் பிடிபட்டது அனைவரும் அறிந்ததே!

அடுத்து, விபச்சாரத் தொழிலில் ''வளரும் கலைஞராக'' ''மாமா'' தொழிலில் கம்பீரமாக குழந்தைகள் பவனிவருவதைக் காணமுடிகிறது. பம்பாய் சிவப்புவிளக்குப்பகுதியில் பல சிறுவர்கள் 'மாமா'க்களாக மாறி வருவது பற்றி ஏற்கனவே பல பத்திரிகைச்செய்திகள் வெளிவந்துள்ளன. வேதனையின் உச்சக்கட்டமாக, பால்மணம் மாறாத சிறுமிகள் பல விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பெட்டிக் கடைக்காரன், பாத்திரக்கடைக்காரன், இரும்புப்பட்டறை, மளிகைக் கடை, ஆலை உரிமையாளர்கள் என்று சகல தரப்பினரிடமும் பிஞ்சுக்குழந்தைகள் படும் கஷ்டம் சொல்லிமாளாது. (இந்த இடத்தில் சிவகாசி தீப்பெட்டி ஆலைகளில் பணிபுரியும் சிறார்களின் நிலையையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்) குழந்தைகளுக்கு சரியான மருத்துவ கவனிப்பு, உரிய பராமரிப்பு, கல்வி வசதி ஆகியன இல்லாததுதான் இந்த இழிநிலைக்கு அடிப்படைக்காரணம் ஆகும். உலக அளவில், தினந்தோறும் நோய்நொடியினால் 40,000 குழந்தைகள் இறப்பதாக ஒரு கணக்கெடுப்பு கூறுகின்றது. தடுப்பூசி போடாததால் மட்டும் 8000 குழந்தைகளும், வயிற்றுப்போக்கினால் ஏற்படும் நீர்சக்தி இழப்பினால் 7000 குழந்தைகளும், நிமோனியாவால் மட்டும் 6000 குழந்தைகளும், அனுதினமும் இறப்பதாக விரிவான புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.



இந்தச் சாவுகளை தடுத்துநிறுத்த நமது அரசாங்கங்கள் என்ன முயற்சிகள் எடுத்தன என்று பார்த்தால் வியப்பும், வேதனையும் மேலிடுகின்றது. வளரும் நாடுகள் தங்களது பட்ஜெட்டில் பாதியை ராணுவத்துக்கும், வெளிநாட்டுக் கடன்தவணை செலுத்தவும் செலவிடுகின்றன. மற்ற பாதியைத்தான் பிற துறைகள் அனைத்துக்கும் கூறுபோடுகின்றன. மக்கள் நல்வாழ்வுக்கு இதில் எவ்வளவு கிடைக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை. ராணுவம், கடன் தவணை ஆகியவற்றுக்காக உலக நாடுகள் நாள்தோறும் 100 கோடி டாலர். (ஒரு டாலரின் மதிப்பு சுமார் ரூ 17)செலவிடுகின்றன.

''இப்போதுள்ள குழந்தை பிறப்பு, இறப்பு போக்கை வைத்து பார்த்தால், 1990 ஆண்டு முதல் அடுத்த 10 ஆண்டுகளில் 150 கோடி குழந்தைகள் பிறக்கும். இதில் 10 கோடிக் குழந்தைகள் ஐந்து வயதை எட்டும் முன்னரே இறந்துவிடும். மேலும் பலகோடிக் குழந்தைகள் ஊட்டச்சத்து இன்றி நோய்களுடன் வாழும்.

நீர் சக்தி இழப்பு, நிமோனியா, டெட்டனஸ், தட்டம்மை, கக்குவான் ஆகியன குழந்தைகளை பெருமளவில் கொல்லும் நோய்களாக கண்டறியப் பட்டுள்ளன. இவைகளைக் கட்டுப்படுத்த முயற்சி எடுத்தாலே நமது குழந்தை செல்வங்களுக்கு நலம் செய்யும் பெரிய கைங்கர்யமாக இருக்கும்!

மனித குலத்தின் மொத்த வருமானத்தில் பாதி அளவு, ஆட்சி பீடத்தில் உள்ளவர்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ராணுவ வெறிக்கு பயன்படுத்தப்பட்டுவிடுகிறது. இதில் 5 அல்லது 10 சதத்தை திருப்பிவிட்டாலும் குழந்தைகளின் நல்வாழ்வுக்காக ஆண்டுக்கு 5000 டாலர் வரை கூடுதலாக செலவிடமுடியும். இந்தத்தொகையைக் கொண்டு எல்லாக் குழந்தைகளின் உணவு, நீர், உடல் நலம் மற்றும் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும்.

அரசுகளின் தவறான அணுகுமுறையும் பிரச்சினையை இன்னும் சிக்கலாக்கி விடுகின்றது. நாம் சிகிச்சைக்காகச் செலவிடுவதைவிட குறைந்த அளவு பணத்தையே நோய்தடுப்பு முறைகளுக்கு செலவிடுகிறோம். 'வரும் முன் காப்போம்' கோட்பாடு வாயில் நிற்கிறதேயொழிய, செயலுக்கு வரக்காணோம். குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் அருகிக் கிடக்கும் நிலை இது. சுகாதாரமற்றச் சூழ்நிலைகள், ஊட்டச்சத்து குறைவு ஆகியவற்றின் மீது அரசு கவனம் செலுத்துவதில்லை. இதனால், குழந்தைகளின் உடல் நலமும், மன வளர்ச்சியும் கெடுகின்றது. குழந்தைகள் மரண விகிதம் அதிகமாக இருப்பதால் பிறப்புவிகிதமும் அதிகரித்து, மக்கள் தொகை விரைவாகப் பெருகுகின்றது. தனிமனிதத் தவறுகளும் கூட குழந்தைகளின் இன்னல்களைப் பெருக்குகின்றன. குழந்தைகளை அதிகமாகப் பெற்றுக் கொள்வது, குறுகிய இடைவெளியில் பெற்றெடுப்பது, இளம் வயதில் (தாய்மார்கள்) குழந்தைகள் பெற்றுக்கொள்வது ஆகியனவும் குழந்தை மரணத்துக்கு முக்கியக்காரணமாக இருக்கின்றன. போலி கௌரவுத்துக்கு பெயர் பெற்ற நடுத்தர வர்க்கத்தினர், தங்களது அழகு கெட்டுவிடுமோ என்று பயந்து தாய்ப்பால் கொடுப்பதைக் கூட நிறுத்திவிடுகின்றனர். இது குழந்தைகளுக்கு இழைக்கப்படும் மிகப்பெரிய அநீதி. குழந்தைகளின் நீண்டகால நலத்தை விட குறுகிய காலமே நிலைக்கும் தங்களது அழகைப்பாது காக்கவேண்டும் என்ற போதையில் திளைக்கும் பேதைகளை என்னவென்று சொல்வது? எத்தனை குழந்தைகள் வேண்டும், எப்போது வேண்டும்என்று முடிவு செய்யும் உரிமை பெண்ணுக்கு இருத்தல் அவசியம். தாய், சேய் ஆகியஇருவரின் ஆரோக்கியத்திற்கும் இது நல்லது.

30 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போது துவக்கப்பள்ளிகளில் குழந்தைகள் சேரும் விகிதம் மீண்டும் குறையத் துவங்கியுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இது மிகவும் கவலை தரும் விஷயம். அதே போல, பள்ளிகளிலிருந்து விலகுவோர் விகிதமும் பெருமளவு அதிகரித்துக் காணப்படுகின்றது. தற்போதுள்ள போக்கை வைத்து கணக்கிட்டுப் பார்த்தால், 1990-ம் ஆண்டில், பள்ளியில் அடியெடுத்து வைக்கும் 10 கோடிக் குழந்தைகளில் 4 கோடிக் குழந்தைகள் துவக்கக் கல்வியை பூர்த்தி செய்யாமலே விலகி விடுவார்கள். ஆரம்பக்கல்வி இலவசமாக அளிக்கப்பட்டாலும் எத்தனை ஏழைக் குடும்பங்கள் தங்களது குழந்தைகளை வேலைக்கு அனுப்பாது, பள்ளிக்கு அனுப்ப சாத்தியப்படும்? குழந்தைகளில்கூட ஆண், பெண் வேறுபாடு பாரபட்சம் காட்டப்படுகின்றது. ஆண் குழந்தைகளைவிட, பெண் குழந்தைகளே முதலில் பள்ளிகளிலிருந்து விலக்கிக் கொள்ளப் படுகிறார்கள். பள்ளி வாசனையே இல்லாத குழந்தைகள் அல்லது பாதியிலேயே படிப்பை விட்டுவிடும் குழந்தைகளில் மூன்றில் இரண்டு பகுதிக்குமேல் பெண்கள்தான் என்பது கவலை தரும் இன்னொரு விஷயம்.

கல்விக்கான ஒதுக்கீட்டை செலவினமாகக் கருதாமல், முதலீடாக கருதும் போதுதான் விடிவுகாலம் பிறக்கும். கல்வி மூலம் கிடைக்கும் பொருளாதாரப் பலன்கள், மற்ற முதலீடு வகைகளிலிருந்து கிடைப்பதைவிட அதிகமாகும். ஒருவரது 4 ஆண்டு துவக்கக்கல்வி அனுபவமானது, பிற்காலத்தில், அவன் விவசாய உற்பத்தித் திறனை 10 சதம் அல்லது அதற்கு மேல் அதிகரிக்கப் பயன்படும் என்கிறது ஒரு கணக்கீடு. பள்ளிகளின் இயக்கச் செலவு, ஆசிரியர்களின் சம்பளம் ஆகியன பள்ளிகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் மிகப் பெரிய பகுதியை விழுங்கி விடுகின்றன. இந்நிலையில், கரும்பலகை மற்றும் இது போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கு நிதிக்கு எங்கே போவது?

உலகம் முழுவதுமுள்ள குழந்தைகளின் எதிர்காலம் இப்படிப்பல கேள்விக் குறிகளை எதிர்நோக்கியுள்ளது. ஒருபுறம், கனவான்களுக்கு இருதயத்தையே வெளியே எடுத்து போட்டு கூறுகளாக்கி பின் தைத்து உள்ளே வைத்துவிட்டு புது வாழ்வு தருகின்றனர்! மறுபுறம், ஏழைக்குழந்தைகள் தடுப்பு ஊசி கூட போடுவதற்கு வழி இல்லாமல் மடியும் நிலை மண்டிக்கிடக்கிறது!

(உலகம் முழுவதும் உள்ள குழந்தைகளின் இன்றைய நிலை பற்றிய ஒரு தகவல்தான் இந்தக்கட்டுரை. ஐக்கிய நாடுகள் சபையின், சர்வதேச குழந்தைகள் நெருக்கடி காலநிதி அமைப்பின் (UNICEF) அறிக்கையிலிருந்து சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களை தோழர்களின் சிந்தனைக்கு முன் வைக்கிறோம். அவ்வளவுதான்! எவ்வளவு பெரிய பிரச்சினை இது! மேலோட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறதே என்று தோழர்கள் பதட்டமடைய வேண்டாம்!)

— ராதா


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நான்
என் வாழ்க்கையை
துன்பப்படும் மக்களுக்காய்
அர்ப்பணிப்பேன்.

நான் என்னையே தியாகம் செய்வேன்
எத்தனை முறை சாக வேண்டியிருந்தாலும்.

நீ வந்தது
என் உதவிக்காக எனில்
உன் நேரத்தை
வீணடிக்கிறாய்

ஆனால்
நீ வந்தது
உன் விடுதலை
என்னோடு இணைந்திருந்த
காரணத்தினால் எனில்,
வா!
இணைந்து போராடுவோம்!

— லில்லா வாட்சன்
(ஆஸ்திரேலியா)